182/1 Thiruganashampa-
-thar lane
Sivan temple.
Trincomalee.

## நெஞ்சம் பொறுக்கவில்லை

## இராசையா ஸ்ரீரங்கன்

# நீங்காத நினைவலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதற்பக்கம் ..............**

ஸ்ரீரங்கன்! ஆம் அந்த இனிய தென்றல் இன்று எம்மோடில்லை

உட்துறைமுக வீதியில் 20.10.98 மாலை இராணுவ "ரக்" வண்டியால் மோதி, அந்த சாந்த மலை சரிக்கப்பட்டு விட்டது.

ஸ்ரீரங்கன், சடவுலகில் கொல்லப்பட்டிருக்கலாம் ஆனால், எமதுள்ளங்களில்..... அந்த சிரிப்பு, கள்ளமில்லா வதனம் ஒரு போதும் நீங்காது.

ஒரு அத்தியாயம் எழுதி முடிக்கப்பட்டுவிட்டது. அந்த அத்தியாயத்தின் முடிவிலிருந்து ஒரு புதிய அத்தியாயம் இங்கு ஆரம்பிக்கின்றது.

அந்த இனிய ஆத்மாவின் நீங்காத நினைவுகள் என்றும் நிலைத்திருக்க இதயத்திலிருந்து இந்த மலர் மலர்கின்றது................

அடுத்த பக்கம்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நில்லுங்கள்! சிந்தியுங்கள் !!

தீயவற்றை பார்க்காதே,
தீயவற்றை பேசாதே,
தீயவற்றை கேளாதே

இது காந்தியடிகளின் வாசகம் இதனை மாற்றுவோம், எமது அகராதியில் "தீயது" என்ற சொல்லை இல்லாதொழிப்போம்.

இனி...... எமது அகராதி நல்லதை மட்டும் உள்ளடக்கும்.

நல்லதையே பார்
நல்லதையே பேசு
நல்லதையே கேள்

மனிதத்தை நேசியுங்கள்; மனிதத்துக்காக வாழுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் / கொட்டடியைப் பிறப்பிடமாகவும்,
திருமலையை வாழ்விடமாகவும் கொண்ட
(வடக்குகிழக்கு மாநில நலவியலமைச்சின் கணக்காளர்)

# அமரர். இராசையா ஸ்ரீரங்கன்

அவர்களின்

## 45 ஆம் நாள் நினைவு

# அஞ்சலி மலர்!



நிஜமாக 1950 ✶ 12 ✶ 31

நிழலாக 1998 ✶ 10 ✶ 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இராசையா ஸ்ரீரங்கன் (31.12.1950 – 20.10.1998)

## திதி வெண்பா

"என்றும் மதிப்பான் இராசையா ஸ்ரீரங்கன்
நன்றே அமரர்பதி நாடியநாள் - குன்றாத
தானியத்து ஐப்பசியை சார்ந்தமதி இல்லாநாள்
ஊனுடலை நீத்தே உடன் !"

## சரிதை அகவல்

இந்துமா கடலில் இலங்கிடும் முத்தாம்
ஈழத்தீவிதன் எழில்தலையாம் யாழ்ப்
பாணமாநகரில் பலர்புகழ்ஊராம்
கொட்டடிதன்னில் குறைதீர்வேளாண்
குடிதனில் வருசற் குணன்-வழக்குரைஞன்
இராசையா துணை எழில்நேசமணிப்
பெற்றோர் தமக்குப் பேர்வரும்படியாய்
ஐம்பதாவது ஆண்டின்முடிவில்
ஸ்ரீரங்கன்இச் செகமதில்வந்தான்!
பரிமேல் அழகன், நித்தியானந்தன்,
ஜனகன், மற்றும் ஜனககுமாரன்,
இயற்கை எய்திய இளமுருகன்,உடன்
சாவுலகெய்திய சாவித்திரியாள்,
தங்கம் ஆகிய சத்தியபாமா,
சேரிடம் சேர்ந்த ஜெயலக்சுமியாள்,
ஜெயராணியுடன், சேர்சிவகுமாரி,
விஜயகுமாரியும் விழைந்துடன்வந்தார்!
பாயிற்கிடந்தும் பக்கத்துருண்டும்
உடும்பு பிடித்தும் உன்னித் தவழ்ந்தும்
பார்த்தும் கேட்டும் பாலமுதுண்டும்
மடியில் விழுந்தும் மழலை பொழிந்தும்
எழுந்து நடந்தும் இடறி விழுந்தும்
ஆடியும் பாடியும் ஆளுடன் ஓடியும்
வான் பிறையெனவே வளர்ச்சியடைந்து
ஐந்தாம் வயதினை அடைந்தான் ரங்கன்!
கல்வியின் சுவையைக் காணவிழைந்து
யாழ் கொட்டடி நமசிவாயம் பள்ளி சென்று
பின் யாழ்நகர்மத்திய பள்ளியடைந்து
கற்று முடித்துக் கணக்கியல்தேர்ந்தான்!
யாழிலே நூல்கள் யாவுமேவிற்ற
அமரர் தம்பித் துரைத்தம்பதியர்
இனிய மகளாம் இளையாள் இந்திரா
நாகேஸ்வரியை நற்றுணையாக்கி
இல்லறமென்னும் நல்லறங்காத்து
கஜிபன்,யதுஷன், கார்த்திகன் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைச் செல்வப் பேறுகள்கண்டும்;
தயானந்தன்,ஸ்ரீ தயகுமார்,மற்றும்
சடாட்சரசோதி, வசந்தி,ஜமுனா
குமாரி,சுமதியாம் மைத்துன மைத்துனி
மார்களைக் கண்டும்; மற்றிவர் மூலம்
லக்ஸ்மன், லண்டன் இளங்கோ, கிறிஸ்டி,
அசோக்குடன்,கனடா பெட்றிக் என்னும்
பெறாமக்கள்தமைப் பிரியமாய்க்கண்டும்;
வைதேகி, அச்சுதன், கிருஷ்ணா,வைசிகன்,
கனடா சங்கரி, யாழின் ஜனனி
லண்டன் சாம்நரேன் எனும்பேர்பூண்ட
மருமக்கள் தமை மகிழ்வுடன் கண்டும்;
மட்டுநகர்-திரு மலை ஈரிடத்தும்
கல்வித்திணைக்களக் கணக்காளராயும்,
வடக்கு கிழக்கு மாநில நலவிய அமைச்சின்
கணக்காளராகக் கடமைபுரிந்தும்,
என்றும் எவர்க்கும் இயலாதெனாமல்
பற்பல உதவிகள் பாங்காய்ப்புரிந்தும்
விளையாட்டார்வமும், வீரப்போக்கும்,
சிரித்த முகமும், சிந்தனைச் செயலும்,
பக்திஉள்ளமும், பண்புடனன்பும்,
நயினை அம்மனில் நாட்டமுங்கொண்டு
'இனியான்-எளியான்- எவரையும் நோகான்'
என்றவாறாக இப்புவி தன்னில்
நாற்பத்தெட்டு நல்லாண்டிருந்து
காலன்போட்ட கண்ணியிற்சிக்கி
மனையாள்,மக்கள், மருகர்,மைத்துனர்
உடன்பிறப்பாளர், உற்றார், உறவினர்,
திணைக்களத்தார்கள், சேதியறிந்தோர்
அனைவருங்கலங்க அறியத்தராமல்
எதிர்பாரா மின் இடிவீழ்ந்தாற்போல்
இருபது -பத்து - தொண்ணூற்றெட்டில்
மண்ணகம்நீங்கி விண்ணடைந்தாரே!
அங்கவ ராத்மா அமைதியைப் பெறயாம்
இங்கிறைதாளை இறைஞ்சிநிற்போமே!

## *மனைவி இரங்கல்*

காலனே துணைவர் எங்கே?
கருணையே இல்லையா? எந்தன்
கோலமிங்கென்ன வென்றே
கூறினால் இரங்குவாயா?
ஞாலமீதுந்தன் கூத்தை
நடத்திவா - எனையும் போக்கு!
மூலமே மறைந்த பின்னர்
முடியுமா பழைய வாழ்வு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் இரங்கல்

எங்களின் மகிழ்ச்சி எல்லாம்
இடையிலேன் துயரமாச்சு?
உங்களை மறக்கொணாமல்
உளந் துடிக்கின்றோமப்பா!
எங்குபோய் என்னவானீர்?
எம்மையும் மற்றதா போனீர்?
இங்கினி வரமாட்டீரோ?
எம்மெதிர் காலம் யாதோ?

## உடன் பிறந்தார் இரங்கல்

உடன் பிறந் தெங்களுக்கோர்
உதவிடும் கைபோலாகி
நடமாடித் திரிந்த தென்ன?
நடு வழி மறைந்ததென்ன?
விடமனம் வந்ததென்ன?
வீடுபோய்ச் சேர்ந்ததென்ன?
கடமைகள் அங்கும் செய்ய
கருதினால்....... என்ன செய்வோம்?

## மைத்துனர் மைத்துனிமார் இரங்கல்

நலம்செய என்றே வந்த
நம் மருமம் மைத்துனர் இன்
றிவை யென நினைக்கும் போதில்
இடைவெளி தெரியுதிங்கே!
வலது கை முறிவுபோலும்
வன்செயல் அழிவு போலும்
நிலைமைகள் தோன்றுதிங்கே!
நிம்மதி வருமா நாளை?

## மருமகள் இரங்கல்

எம்முடன் அன்பாய் இங்கே
இருந்துமே வந்தாய் மாமா,
நம்மையும் பிரிய வைத்தே
நடத்திடச் செய்தார் யாரோ?
உம்மையே எண்ணி எண்ணி
உருகிய வாறிங்குள்ளோம்!
இம்மை போய் மறுமை வந்தால்
எம்மை நீர் காணுவீரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் இரங்கல்

மக்களாய் எமையும் பார்க்க
மறந்ததேயில்லை நீங்கள்!
தக்கவாறுதவி செய்யத்
தயங்கியதில்லை நீங்கள்!
இக்கணம் இல்லை யென்றே
இவ்விடம் வருந்துகின்றோம்!
துக்கத்தின் பின்னால் ஏதும்
சுகமுமுண்டாமோ தந்தாய்?

## உற்றார் உறவினர் இரங்கல்

நல்லவர் இந்த நாட்டில்
நாள்பல வாழ்வதில்லை!
வல்லவர் ஆகி னாலும்
வாழ்வினில் பிழைகள் நேரும்!
இல்லையே ரங்கன் என்னும்
இனியவர் எங்களோடு?
வெல்வதோ காலன் வேலை?
வீழ்வதோ எங்கள் பாடு

## கல்வி அமைச்சு இரங்கல்

கல்வியே நமது கண்கள்!
கல்விக்கே பேர மைச்சு!
நல்லவர் பல்லோர் வந்து
நலமுறைக்காத்தார் இ்.தை!
வல்லவர் ரங்கன் நாங்கள்
வாழ்த்தவே கடமை செய்தார்!
இல்லையே என்ப தொன்றே
எங்களின் துயர மிப்போ?

## நலவியல் அமைச்சு இரங்கல்

நலவியல் அமைச்சே மக்கள்
நலங்களைப் பேணுமொன்று!
கலகலப்போடும் ரங்கன்
கடமைகள் புரிந்தாரி்.தில்!
பலருக்கு உதவும் நெஞ்சப்
பான்மையோடிருந்த அன்னார்
நிலமிசை இவையே என்ற
நிலமைதான் துயரமாச்சு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோற்றம்

உலகமோர் மேடை! நாங்கள்
உன்னத நடிகர்! எங்கள்
நலமிகும் ஆடை இந்த
நல்லுடல்! நடித்த பின்னர்
பலமுறை களைவோம்! ஆன்மா
பல உடல் எடுக்கும்! ஆயின்
புலம்பலை விடுவோம்! வாழ்வைப்
புரிந்துமே நடந்து கொள்வோம் !

## நன்றி

அன்றெம தமரர்க் காக
அறுதிநாள் வந்தோர்க்கெல்லாம்
நின்றவர்க்காக யாவும்
நிகழ்த்திய பேருக்கெல்லாம்
இன்று மிந் நிகழ்வில் வந்தே
இருப்பவர்க்கெல்லா மெங்கள்
நன்றியை நவிலுகின்றோம்
நலமுடன் ஏற்குமாறே!

இவ்வண்ணம்,
*அமரர்தம் குடும்பத்தினர்*

# கணபதி துணை

கஜானனம் பூதகணாதிஸே விதம்
கபித்த ஜம்பூபல ஸாரபக்ஷிதம்
உமாஸூதம் சோனவினாச காரணம்
நமாமி விக்னேஸ் வர பாதபங்கஜம்

## ஔவையார் அருளிச்செய்த விநாயகரவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞானும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்கு பொன்முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திய பேச்சுரை யறுத்தே
இடைப்பிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கிய வென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரு மானதத் தழுத்தியேன் செவியில்
எல்லை யில்லா வானந்தம் மளித்து
அல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விறங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொரு டனைனை
நெஞ்சக கரத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயகரவல் முற்றுப்பெற்றது.

*திருச்சிற்றம்பலம்*

## *தேவாரம்*

தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
தாமும் போவார்
கோந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால்
ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலாம் மையல்
கொண்டஞ்சல் நெஞ்சே

## *திருவாசகம்*

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து (உ)ன் விரையார்
கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி
உள்ளம்
பொய்தான் தவிர்த்து (உ)ன்னை போற்றி
சயசய போற்றியென்றுங்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருவிசைப்பா*

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலா கரு ணைமா கடலை
மற்ற வரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன்றன் னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

*திருப்பல்லாண்டு*

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாளுமை கோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த பித்தற்குப்
பல்லாண்டு
கூறுதுமே

*திருப்புராணம்*

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லுன்னையென்று
மறவாமை வேண்டு மின்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுனடியின் கீழிருக்க வென்றார்

*திருப்புகழ்*

உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலுள் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவு தருவாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அம்பர்தமக் கானறிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராமலிங்க சுவாமி பாடல்

ஒருமையுடனினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினது புகழ் பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவேண்டுமுனை
மறவா திருக்கவேண்டும்
மதிக்கவேண்டும் நின் கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வு நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகந் தெய்வமணியே

### பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

கல்லாப் பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப்பிழையு நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி யேகம்பனே

## நவக்கிரக வழிபாடு

### சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

### சந்திரன்

எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாய்

சிறும்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்முடி போற்றி
பதந்தும் தாள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி

## வியாழன்

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பாகுரு நேசா
க்ரக தோஷமின்றிக் கடாக்ஷித் தருள்வாய்

## வெள்ளி

சுக்ர மூர்த்தி சுபமிக யீவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளி சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே

## சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்களம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா.

## இராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *கேது*

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி

## *தெய்வமணிமாலை*

வள்ளலுனை யுள்ளபடி வாழ்த்துகின் றோர்தமை
மதித்திடுவ நன்றி மற்றை
வானவரை மதியென்னி னானவரை யொரு
மாட்டினு மறந்து மதியேன் (கனவின்
கள்ளமறு முள்ளமுறு நின்பதம லால்வேறு
கடவுளப் பதத்தை யவரென்
கண்ணெதி ரடுத்தைய நண்ணென வளிப்பினுங்
கடுவென வெறுத்து நிற்பேன்
எள்ளளவு மிம்மொழியி லேசுமொழி யன்றுண்ணங்
என்னையான் டருள் புரிகுவாய்
என்றந்தை யேயெனது தாயேயெ னின்பமே
என்றன்றி வேயெ னன்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய கர்ம விளக்கம்

சைவ சமயத்தவர்களால் இடை விடாது நாள்தோறும் இயற்றப் படவேண்டிய செயல்களே இங்கு நித்திய கருமமென வியந்து பேசப் படும். அவை நாள்தோறும் செய்யப்பட வேண்டியது ஆதலாலும், இடையே விடக்கூடாமையாதலாலும், நித்திய கர்மமென இப்பெயர் பெற்றன.

அந்நித்திய கர்மங்கள், சிவத்தியானம், அவசியகர்மம், தந்த சுத்தி, ஸ்நானம், அனுட்டானம், சிவபூசை ஆலய வழிபாடு, பசுவழிபாடு, போசனம், பொருளீட்டல், சிவ கதை கேட்டல், மாலைக்கடன், நித்திரை என்னும் பதின்மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படும். இவைகள் பெரும் பாலும் சரியை, கிரியையில் நிற்பார்க்கும் சிறுபான்மை யோக ஞான நிலையினர்க்கும் உரியன.

நாமெல்லாரும் நித்திரை விட்டெழ வேண்டிய வைகறைக் காலந் தொடங்கி மீட்டும் நித்திரைக்குப் போகவேண்டிய இரவு பத்து நாழிகை வரையான காலத்தைப் பெரும்பான்மையான தகுதி பற்றி அறக்காலமும், பொருட்காலமும், இன்ப காலமுமென முத்திறப்படுத்தலாம். இம்முத்திறத் தில் வைகறை தொடங்கிக் காலைபத்து நாழிகைவரையான காலம் அறக்காலமாம். இக்காலத்திலேயே சிவத்தியானம், சந்தியாவந்தனம், சிவபூசை முதலிய புண்ணிய கருமங்கள் மிகுதியாய்ச் செய்யப்படுவதால் இ∴து அறக்கால மெனுந்தகுதி உடைத்தாயது. பின்னர் மாலை இருபத் தைந்து நாழிகை வரையான காலம் பொருட்காலமாம். இக்காலத்திலேயே யாவருஞ் சீவனோபாயமாகிய தந்தமக்கியன்ற விருத்திகளில் சென்று பெரும்பாலும் பொருளீட்டுவராகையால் இ∴துபொருட்கால மெனப்பட்டது. மேலிரவு பத்து நாழிகை வரையான காலம் இன்ப காலமாம். இக்காலத் திலே யாவரும் விரும்பியதையநுபவிக்கும் காலமாகையால் இ∴தின்ப காலமெனப்பட்டது. அதன் மேல் இரவு இருபத்தைந்து நாழிகை வரை யான காலம் நித்திரைக் காலமாம். இ∴து மேற்குறித்த முத்திறக்காலங் களில் தொழிற்பட்ட சரீரத்திலமைந்த மனம் முதலிய கருவிகள் அடைந்த சிரமத்தைப் பரிகரித்துகொள்ளுமாறு அமைந்த காலமாகும். ஆகவே ஒவ்வொரு நாளும் அறக்காலம், பொருட்காலம், இன்பகாலம், நித்திரைக் காலம் என நான்கு பிரிவுடையதாய், நீதி தவறாது நடத்துவதற்கும் சன் மார்க்கவழியால் பொருளைத் தேடுவதற்கும் ஐம்புலன்களும் அமைந்து இன்பம் நுகர்வதற்கும், அயர்வு தீர நித்திரை செய்வதற்கும் உரியதா கின்றது. இனி முறையே இந் நான்கு காலத்திலும் செய்யப்படும் சிவத் தியானம் முதல் நித்திரை ஈறாய நித்திய கர்மங்கள் பதின்மூன்றும் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. சிவத்தியானம்

ஒவ்வொரு நாளும் சூரிய உதயத்துக்கு முன் ஐந்து நாழிகை யளவில் நித்திரை விட்டெழுதல் வேண்டும், எழுந்து இயன்றசுத்தி செய்து, கிழக்கு அல்லது வடக்கு முகமாகவிருந்து, விபூதி திரித்துக் கொண்டு குரு உபதேச முறைப்படி சிவத்தியானம் செய்ய மற்றொரு விஷயத்திலும் புத்தி செல்லாது மனந்தெளிவாயிருக்குங் காலம தேயாகையாலும் நாம் செய்யத் தொடங்கும் நித்திய கர்மங்களெல் லாம் இடையூறின்றி இனிது நிறை வேறுவதற்கு, முதலில் சிவத் தியானம் ஒருதலையாக வேண்டப்படுதலாலும், அக்காலம் சிவத் தியானத்திற்குச் சிறந்ததாயிற்று. இக்கருத்தைப்பற்றியே திருநாவுக் கரசு சுவாமிகளும்,

வாழ்த்தவாயும் நினைக்கமடநெஞ்சும்
தாழ்த்தச்சென்னியும் தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர் தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேன் நெடுங்காலமே

என்றும் கூறியிருக்கின்றார்.

நமது தேகம் முக்கியமாய் சிவ வழிபாடு செய்து நாம் உய்யுமாறே இறைவனால் தரப்பட்டனவாகையால் நாம் அவற்றைக் கொண்டு முதலில் சிவ வழிபாடாகிய தியான தோத்திரங்கள் செய்வதே முறைமையாகும். இங்ஙனஞ் சிவத்தியானஞ் செய்துவரும் பயிற்சி நாளடைவில் "நின்றுமிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப் பதுன்றாளிணை" என்று நினைத்தற்கு ஏதுவாய் பரமுத்தி சாதன மாகும்.. "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்" என்று கூறினர். திரும்புதலின்றி பேரானந்தம் பெற்று விண்ணுலகில் இடையூறின்றி வாழச் செய்வது சிவத்தியானமேயாம்.

# 02. அவசியகருமம்

பின்னர் எழுந்து ஊருக்குப்புறமாய் வழி குழிநீர்நிலை, நீர்க் கரை, நந்தவனம், பசும்புற்றரை, விளைநிலம் மயானம் தேவாலய சமீபம் முதலியவிடங்கள் இல்லாதனவாய் உள்ள தனியிடத்திற் சென்று, தலையையுங் காதுகளையும் வஸ்திரத்தினால் மூடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சந்தியாகாலங்களிலும் பகற் காலந் தேவகாலங்களாகையினா லும் வடக்கு முகமாகவும், இரவில் தெற்கு முகமாகவும், மௌனமாயிருந்து மலசலங்களித்தலாகிய அவசியகருமம் முடித்து பின்சலக்கரையை யடைந்து மண்ணுஞ்சலமுங் கொண்டு சௌசஞ் செய்து பின்வேறொரு துறையிற் போய் கால், கை, முகம் கழுவுதல் வேண்டும். உண்ட உண வின் கோதாகிய மலம் வயிற்றிலிருப்பின் மனம் தூய்மையுறாது. பசி மந்திக்கும். பித்தமதிகரித்துச் சிரக நோயுண்டாகும். ஆதலால் அஃது ரிய காலத்தில் செய்யா தொழியின் தேகத்திற்குத் துன்பம் விளைத்த லாக விருத்தலின் அவ்வக் காலங்களில் தவறாது செய்யப்பட வேண் டும். இக் கருத்தை விளக்குமாறு ஆளுடையடிகளும் "காலை மல மொடு கடும்ப கற்பசி நிசி வேலை நித்திரை பிளைத்தும்" என்று கூறிய வாறு விடியற்காலையிலேயே கழிக்கப்பயின்று கொள்ளுதல் வேண்டும்.

## 03. தந்த சுத்தி

அதன் பின் வசதியான ஓரிடத்தில் கிழக்கு அல்லது வடக்கு முகமாகக்குந்தி இருந்து கொண்டு பல் துலக்கல் வேண்டும். பல் துலக் குவதற்கு கைவிரல் மண், செங்கல், பாளை வைக்கோல் முதலியன ஆகாது ஏன்னெனில் இவைகள் பல்லின் நிலை தளர்வதற்கு காரணமாக வும் பல்லினிடைகளிற்றங்கிய அழுக்கைச் சுத்தி செய்யவும் மாட்டாவாம்.

ஆல், வேல், புல்லாந்தி, நாயுருவி, வேம்பு, மா, மருது, நாவல், இத்தி, ஆத்தி முதலியவைகள் விசேடமுள்ளன. இக்கருத்துப்பற்றியே ஆன்றோரும்,"

"வேலுக்குப்பல்லிறுகும் வேம்புக்குப்
பற்றுலங்கும்
பூலுக்குப் போகமிகும்--ஆலுக்குத்
தண்டாமரையாள் வீற்றிருப்பாள்.
நாயுருவி முகவசீகரமாம்"

என்று கூறியிருக்கின்றார். ஆகையால் மேற் சொல்லப்பட்டனவற் றில் சிறு விரல் பருமையில் நேரியானவாயுங், கணுவற்றனவாயுந், தோல் நீக்கா தானவாயும், உலராதன வாயும், வேண்டிய அளவினதாய் எடுக்கப் பட்ட கொம்புகளுமிலைகளும், கல்நார் முதலியவற்றால் செய்யப்பட்ட பற்பொடியும் பல் துலக்குதற்குரியன. ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்ற ஆன்றோர் வாக்கு இங்கே ஆராயத் தக்கது. பற்கொம்பினால் பற் களை உள்ளும் புறம்பும் நன்றாகச் சுத்திசெய்து, ஒரு குச்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாகப்பிளந்து நாவினழுக்கை வழித்து, வாய் கொப்பளித்து, முகம் கை கால்களைக் கழுவுதல் வேண்டும். பற்களிலும் நாவி லும் தங்கும் அழுக்கு விஷத்தன்மையுடையதாகும்.

ஒருவன் இராத்திரி காலத்தில் சிறிய அரிசியை தன் வாயி லடக்கியிருந்து, காலையிலதனையோர் பிராணிக்குக் கொடுப்பின் அதனுண்மை புலனாகும். சரீரத்திலுள்ளிருந்து வெளியே களிகின்ற கரியமல வாயுவினால் உள்ளேயுள்ள மலமுதலியவற்றின் நச்சுத் தன்மைகள் வெளியே தள்ளப்படுகின்றன. அவை பல், நாக்கிலிடத் தும், மற்றும் நாசி முதலிய துவாரங்களிடத்தும், உரோமத் துவாரங் களிடத்தும் வந்து தங்குகின்றன. இந் நச்சழுக்குகள் சுத்தி செய்யப் படாவிடத்து உண்ணும் உணவுடனும் உட்கொள்ளும் பூரக வாயு வுடனும் உட்சென்று நோய்க்கு ஏதுவாகும்.

## 04. ஸ்நானம்

ஸ்நானம், வாரணஸ்நானம், பஸ்மஸ்நானம், மானசஸ்நானம், திவ்விய ஸ்நானம், முதலிய பல்வகைப்படும். அவற்றுள் வாரண ஸ்நானம், சிரஸ்நானம், கண்டஸ்நானம், கடிஸ்நானம், பாதஸ்நானம் என்னும் பலபிரிவுகளை உடையது. இந்த ஸ்நானத்துக்கு நதி, சங்கமம், ஓடை, தடாகம், கேணி, மடு முதலியவற்றின் சுத்த நீரே சிறந்ததாம். சுத்தமான கிணற்று நீரும் கொள்ளப்படும். எப்போதும் சிரஸ்நானமே செய்தல் வேண்டும். ஸ்நானம் செய்யுமுன் வஸ்திரங் களை நன்றாகத் தோய்த்து அலம்பித்தரித்து, உடம்பினழுக்கை நன்றாகத் தேய்த்து, சலத்தினாலே கழுவிக் கொள்ளல் வேண்டும். பின்னர் தொப்பூழ் அளவினதாகிய சலத்திலே இறங்கிக்காதுகளை யும், கண்களையும், நாசித்துவாரங்களையும், கைவிரல்களினால் மூடிக்கொண்டு முறைப்படி முழுகுதல் வேண்டும். பின்பு கரையேறித் தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினா லீரந்துவட்டி, நெற்றியில் விபூதி தரித்து, ஈரவஸ்திரங்களைக் களைந்து உலர இட்டு, தோய்த்துலர்ந்த வஸ்திரங்களை அணிதல் வேண்டும். நோய் முதலியவற்றால் சிரஸ்நானம் செய்யமாட்டாதவர் கண்டமளவாகுதல், இடுப்பளவாகு தல், பாதமளவாகுதல், சலத்தினாலே கழுவி, கழுவாதெஞ்சிய விடங்களை ஈரவஸ்த்திரத்தால் ஈரம்படும்படி துடைத்தல் வேண்டும். இங்ஙனஞ் செய்யப்படுங் கண்ட ஸ்நானம் முதலியவை கழுத்திற்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் சலத்தினாற் குளிக்கும் கபிலஸ்நானமென்று சொல்லப்படும். "புறந் தூய்மை நீரானமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்னும் திருக்குறளால் சரீரசுத்திக்குச் சலமே சிறந்தது என்பது யாவரும் ஒத்துக் கொள்ளக் கூடியதாம்.

பஸ்மஸ்நானமாவது பஞ்சகலா மந்திரங்களினாலும், சம்கிதா மந்திரங்களினாலும் செபிக்கப்பட்ட விபூதியைச் சலத்துடன் பஞ்சபிரம மந்திரங்களினால் சிரசில் அபிஷேகித்துச் செய்வது. இதை இஃதாக நேய ஸ்நானம் எனவுஞ் சொல்லப்படும். இதுவாரண ஸ்நானத்தின் பின் செய்யப்படுவது. இதன்பின் மானத ஸ்நானம் சிவமூலமந்திரத்தை நானாந் தமாகச் செபித்து விந்துஸ்நானத்திலிருந்து பெருகுமமிர்தப்பிரவாகத்தில் சரீரம் உள்ளும், புறமும் மூழ்கியதாகப் பாவித்துச் செய்யப்படுவது திவ் வியம், வாயவ்வியம் இரண்டும் முறையே வெயில் எறிக்கும் போது விழும் மழைத்துளிகளில் நிற்றலாலும் பசுக்களின் காலினாலுண்டாகும் தூளி சரீரத்தில் படும்படி அவற்றின் கூட்டத்தில் செல்லுதலாலும், செய் யப்படுவன. இவை நைமித்திக ஸ்நானங்களாம். நைமித்திக ஸ்நானமாவது விசேட தினங்களிற் செய்யப்படுவது, ஒற்றுமை பற்றி இங்குரைக்கப்படுவன.

## 05. அநுட்டானம்

அநுட்டான மென்பது மந்திர முறையாகச் சந்தியாகாலங்கள் தோறும் செய்யப்படும் கிரியைகளின் தொகுதியேயாம். இது சந்தியா காலங்களிற் செய்யப்படுவதால் சந்தியா வந்தனம் எனப்படும். அது பிராதசந்தியாகிய காலைச்சந்தி, மத்தியானச் சந்தி, சாயங்காலச் சந்தி, அர்த்த சாமச்சந்தி என நான்கு வகைப்படும். சமய தீக்ஷிதர் பிராதகால சந்தியா வந்தனமும் விசேடதீக்ஷிதர் அதனோடு சாயங்கால சந்தியா வந்தனமும், ஆசாரியர் அவற்றோடு அர்த்தசாம சந்தியா வந்தனமுஞ் செய்தல் வேண்டும். சந்தியாகாலங்களில் நன்றாகத் தியானிக்கப்பட்டுச் சகல கர்மசாட்சியாகவுள்ள சிவசத்தியைத் தியானிப்பவர்கள் சிவத்தோடு அபின்னமாயிருக்கும். தீட்சையின் பேதப்படி இச்சா, ஞானா, கிரியா, சொரூபமாயுள்ள பிராமி யென்னுஞ் சரசுவதியையும், முறையே ஞானா சத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி எனவும் இரத்தநிறமுள்ள இரக்கை என் றும், வெள்ளை நிறமுள்ள சுக்கிலை எனவும் பச்சைநிறமுள்ள அசுதை எனவும் முத்திறப்படும். சமயதீட்சை மாத்திரம் பெற்ற சாமானிய புத்திர ரும் அவற்றினோடு நிருவாண தீட்சை பெற்ற விசேட புத்திரரும் தாமுஞ் செய்ய வேண்டிய சந்திகளில் பிராமி, வைஷ்ணவி, ரௌத்திரி என்னுஞ் சத்திகளை காலை, உச்சிமாலை என்னுங் காலங்களில் முறையே மார் பாகிய இருதயம், நெற்றியாகிய விந்து, கபாலமாகிய பிரமந்திரம் என்னுந் தானங்களில் தியானிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மூன்று தீட்சையுடன் சாதகாபிஷேகமும் பெற்ற சாதகர் (உபாசிரியர்) தாஞ்செய்யவேண்டிய சந்திகளில் ஞானசத்தி, கிரியா சத்தி, இச்சாசத்தி என்னுஞ் சத்திகளையும் அத்தீட்சையுடன் ஆசாரியாபிஷேகமும் பெற்ற ஆசாரியர் தாஞ்செய்யவேண்டிய சந்திகளில் இரத்தை, சுக்கிலை அசிதை, கிருஷ்ணை, என்னுஞ் சத்திகளையும், காலை உச்சிமாலை என்னுங்காலங்களிலும், அவற்றோடு நடு இரவிலும் முறையே இருதயம் விந்து, பிரமரந்திரம் என்னுமிடங்களிலும் அவற்றோடு தலைக்கு மேல் பன்னிரண்டங்குலத்துக்கப்பாலுள்ள படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய நடராசப் பெருமானையுந் தியானிக்க வேண்டும்.

இவ்வனுட்டானத்திலுள்ள கிரியைகள் இடசுத்தி, கணபதி குரு வணக்கம், சலசுத்தி, ஆசமனம், தொடுமிடம், விபூதிசுத்தி, முக்குறி தரித்தல், பஸ்ம ஸ்நானம், மானச ஸ்நானம், கர நியாசம், அங்க நியாசம், பிராணாயாமம், அமிர்தோப ஸ்நாபனம், சந்தியாதேவி தியானம், மார்ச்சனம், அகமர்ஷணம், சதா சிவத்தியானம், சிவகாயத்திரிசெபம், தர்ப்பணம், தீர்த்தோப சம்காரம், சிவமூலமந்திராதி செபம், தர்ப்பணம், தீர்த்தோப சம்காரம், சிலமூல மந்திராதி செபம் ஸ்தோத்திரம், திக்குவந்தனம், நமஸ்காரமென்பனவாம்.

சந்தியா காலங்களில் மாத்திரமே விபூதி தண்ணீரோடு சேர்த்து முக்குறியாகத் தரித்தல் வேண்டும். மற்றைய காலங்களில் நீர் சேர்க்காது, உத்தூளனமாய்ப் பூசல்வேண்டும். நித்திரைக்கு முன்னும் பின்னும் ஸ்நானஞ் செய்தவுடனும் சந்தியா காலங்களிலும், சூரிய உதய அஸ்த மயனங்களிலும், பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்துக்கு முன்னும் பின்னும், விபூதி அவசியம் தரித்தல்வேண்டும். இங்கே குறிக்கப்பட்ட மந்திர, கிரியைகளைக் குருமூலமாகவறிந்து மந்திர சகிதமாகச் செய்ய வேண்டியன. ஆதலின் நீண்டு விரிக்கப்பட்டில.

## 06. சிவ பூசை

சிவபூசை ஆன்மார்த்தம், பரமார்த்தம், என விருவகைப்படும். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், என்னும் நான்கு வருணத்தவரும், அநுலோமனாகிய ஐவரும் ஆன்மார்த்த பூசைக்குத் தகுதியுடையவர். ஆதிச்சைவர்களாகிய சிவப்பிராமணர்கள் ஆன்மார்த்தம், பரமார்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டிலும் பேரதிகாரமுடையவர். யாவருங்குரு மூலமாய்ச் சமயம், விசேஷம் என்னுமிருவித தீட்சையையும் பெற்றுத் தமக்கு இஷ்டமான சிவலிங்கத்தை எழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு, பத்திர புஷ்பம், சந்தனம், பஞ்சகவ்வியம், தீபம், தூபம், திருமஞ்சனம், நைவேத்தியம் முதலிய பூசோபகரணங்கள் எல்லாவற்றையுஞ் சம்பாதித்துக் கொண்டு பூதசுத்தி, ஸ்தானசுத்தி, லிங்கசுத்தி, என்னுஞ் சுத்திகளைச் செய்து முன்னர் அகப்பூசையும், பின்னர்ப்புறப் பூசையும் புரிந்து அக்கினி காரியம் முடித்தலாகிய ஆன்மார்த்தபூசை செய்குக. ஆன்மார்த்தமாக எழுந்தருளப் பண்ணிக் கொள்ளும் இஷ்டலிங்கமானது பசுமண்லிங்கம், சுடுமண்லிங்கம், தாருலிங்கம், சைலலிங்கம், சுயம்புலிங்கமென்னும் பேதங்களையுடையது. இவைகள் முறையே ஒன்றற்கொன்று உயர்வாகும். இவற்றுள் பூசை முடிவில் கைவிடப்படும் பசுமண்லிங்கம் முதலியன ரட்சணிலிங்கம் எனப்படும். அவை மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம் வெண்ணெய், உருத்திராட்சம், தெர்ப்பை, சந்தனம், புஷ்பமாலை, சர்க்கரை, மா, எனப் பன்னிரண்டு பிரிவின. இவ்வான் மார்த்தபூசை சிவலிங்கம் மாத்திரம் பூசிக்கப்படும் சுத்தமும், உமாதேவி, விநாயகர், கந்தர் இடபதேவர், என்னுமிவர்கள் நால்வரையும் சேர்த்துப் பூசிக்கப்படுங் கேவலமும், சூரியன், விநாயகர், சண்டேசுரர் முதலாய் விரித்துப் பூசிக்கப்படுங் கலப்பு மூவகைப்படும்.

இவற்றுள் இயன்றதொன்றை, முப்போது அன்றி இருபோது, ஒருபோதாயினும் நாள்தோறுஞ் செய்குக. இவ்வான்மார்த்த பூசைக்கு அருகரல்லாத பிரதி, லோமர் முதலாயினோர் ஆசாரியரையடைந்து தத்தமக்கியைந்த தீட்சையைப்பெற்று திருக்கோபுரம் ஸ்தூபிகளைக் கீலமாகப் பூசித்தேனும் தம்முள்ளக் கமலத்துற்ற சிவலிங்கத்தையேனும் சூரியமண்டல மத்திம சதாசிவ மூர்த்தியையேனும் பூசை செய்க. யாராயினும் தத்தமக்கியைந்தவாறு சிவபூசை செய்யாதவருக்குக்கதியில்லை. பரார்த்த பூசைக்கு ஆதிச்சைவருள்ளும் சமயம் விசேஷம் நிருவாணம், ஆசாரியபிஷேகம் என்னும் நால்வகைச் சமஸ்காரமும் பெற்றவரே தகுதியுடையர். பரார்த்தலிங்கம், மனுஷலிங்கம், ஆருஷ லிங்கம், தைவிகலிங்கம், காணலிங்கம், சுயம்புலிங்கம் என ஐவகைப்படும். இவையொன்றுக்கொன்று விசேடமானது. வைதிகப் பிராமணருள் சமயாதி தீட்சா சமஸ்காரங்களைப் பெற்ற மகா சைவர், இஷ்டலிங்கத்தை யன்றி பரார்த்த லிங்கத்தைப் பூசிப்பது தகுதி இல்லை. அநாதிச் சைவராகிய சதா சிவ மூர்த்தியை ஆன்மார்த்தம் (தனக்கும்) பரார்த்தம் (பிறர்க்கும்) இரண்டிலும் பூசிப்பதற்கு' ஆதிச் சைவரும் ஆன்மார்த்தத்திற்கு பூசிப்பதற்கு மகா சைவர், அநுசைவர், அவாந்தர சைவர், பிரவரசைவர் என்னும் நால்வரும், திருக்கோபுரம் முதலிய இடத்திற் பூசிப்பதற்கு அந்தியசைவரும் தகுதியையுடையர். இச்சைவ பேதங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரியசதாசிவனென்போன்னாதிச்சைவன்பா
லவதரித்த சிவமறையோ ராதிச் சைவரிவர்பால்
உரியசிவதீக்கை பெற்ற பூசுரர்மா சைவருயர்ந்த வரசன்
வணிகன வசைவராவர்
பெரியகுவளைப் புயத்தோ னவாந்தர சைவன்
சீர்பெறு சவனைனாதி யனுலோமர் பிரவரராம்
விரியவனிமிசை யொழிந்தோரந்திய சைவத்தோர்
விரிந்திடுமேழ் சைவவித மிவையென நூல்விளம்பும்."

என்னும் செய்யுளா லறிக.

# 07. ஆலய வழிபாடு

யாவரும் தினந்தோறும் தங்கள் கிராமங்களிலுள்ள ஆலயங்களுக்குப் போய்ச் சிவவழிபாடு செய்தல் வேண்டும். தங்கள் கிராமத்தில் சைவ ஆலயமில்லையாயின், அக்கிராமத்திற் குடியிரா தொழிக. ஸ்நானம், அநுட்டானம் முதலியன முடிந்த பின்னர், தேங்காய் பழம் முதலியவற்றைக் கொண்டு பாதசாரியாய் ஆலயத்தை நோக்கிச் செல்லுக. திருக்கோயிலுக்குச் சமீபத்தில் கால்களைக் கழுவிக்கொண்டு திருக்கோபுரத்தை வணங்கிச் சிரசிற் குவித்த கையுடன் சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே சென்று, பலிபீடத்தையும், கொடிமரத்தையும், இடப தேவரையும் கும்பிட்டு கிழக்கு, மேற்கு நோக்கிய சந்நிதானங்களில் வடக்கு முகமாயும், தெற்கு, வடக்கு நோக்கிய சந்நிதானங்களில் வடக்கு முகமாயும், தெற்கு, வடக்கு நோக்கிய சந்நிதானங்களில் கிழக்கு முகமாயும், பலிபீடத்துக்கிப்பால் அட்டாங்க, பஞ்சாங்க, முறையாக மும்முறை நமஸ்கரித்து, மும்முறை பிரதட்சிணஞ் செய்து மீட்டுஞ் சந்நிதியில் நமஸ்கரிக்க. பின்னர், துவாரபாலகர்களையும், நந்தி தேவரையும் வணங்கி அநுமதி பெற்று உட்புகுந்து விக்கினேசுவரரைப் பூசித்து, சிவசந்நிதியினும், தேவ சந்நிதியினும், அர்ச்சனை செய்வித்து, கற்பூராராதனை தரிசித்து, விபூதி முதலிய பிரசாதங்களையேற்று, நடேசர், தட்சிணாமூர்த்தி, சோமஸ் கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும், சமய குரவர்களையுந் தரிசித்து தேவி ஆலங்களில் பிரதட்சிண நமஸ்காரங்கள் நான்கு முறை செய்க. விக்கினேசுரரை வணங்கும் போது முட்டியாகப் பிடித்த இருகையினாலும், நெற்றியில் மும்முறை குட்டி, மும்முறை தோப்புக்கண்டமிட்டு, வணங்குக. பின்னர் சண்டேசுரரை வணங்கி மும்முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதரிசன பலத்தைப் பெற்று வலமாய்வந்து இடப தேவரது கொம்பின் நடுவே சிவத்தை வணங்கி முன்போலப் பலிபீடத்துக்கிப்பால் நமஸ்கரித்துச் சிவமூல மந்திர முதலியவற்றை இயன்றளவு செபித்து மீட்டும் வணங்கி வீட்டுக்குச் செல்லுக.

எப்போதும் ஆலயதரிசனம் செய்ய இயலாதவர்கள் திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளும் பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சந்திர சூரிய கிரகணங்கள், சிவராத்திரி, நவராத்திரி, விநாயக சதுர்த்தி, விநாயக சட்டி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் ஆவசியகந் தரிசனஞ் செய்தல் வேண்டும். ஆலயதரிசனத்துக்குச் செல்பவர் ஆசாரமில்லாது போதல், கால்கழுவாது போதல், எச்சிலுமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குநீர் சிந்துதல், பாக்கு வெற்றிலை உண்ணுதல், போசனபானம் பண்ணுதல், ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக் கொண்டிருத்தல், மயிர்கோதி முடிதல், சூதாடுதல், சிரசில் வஸ்திரந்தரித்தல், உத்தரீயமிடுதல், போர்த்துக் கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், பாதரட்சையிட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தை மிதித்தல், கடத்தல், ஸ்தூபி, துவசஸ்தம்பம், பலிபீடம், இடபம், விக்கிரகம், என்னுமிவற்றின் நிழலை மிதித்தல், கடத்தல், வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்குமிடையே போதல், இடையே நமஸ்கரித்தல், ஒரு இருதரம் பிரதட்சண நமஸ்காரஞ் செய்தல், ஓடி வலம் வருதல், அகாலத்தில் போதல், திரையிட்ட பின்னும், அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்குதல், சுவாமிக்கு எதிரிலும் பின்புறத்திலும் வணங்குதல், திருவிளக்கவியக்கண்டும் தூண்டா தொழிதல், திருவிளக்கில்லாத போது வணங்குதல், உற்சவங் கொண்டெழும் போது அங்கேயன்றி உள்ளே போய் வணங்குதல், முதலிய குற்றங்களுண்டாகாதவாறு சாவதானமாயிருத்தல் வேண்டும்.

ஆலயத்திலே கூட்டுதல், மெழுகுதல், நந்தவனம் வைத்தல், பத்திர புஷ்பமெடுத்தல், மாலைகட்டுதல், தூபதீபமிடுதல், பூசைத்திரவியம் கொடுத்தல், தோத்திரம் பாடல், ஆனந்தக் கூத்தாடல், வீதியிற் புற்செருக்குதல், வாகனந்தாங்குதல், சாமரம் வீசுதல், குடை, கொடி, ஆலவட்டம், தீவர்த்தி பிடித்தல், முதலிய திருத்தொண்டுகளில் தம்மாலியன்றவற்றைச் செய்தல் வேண்டும். சிவவழிபாட்டின் பலனையும் முறையையும் மாண்டப் பிறப்பிற் கூறியிருக்கும் மாணிக்கவாசகரது "நிலைபெறுமா றெண்ணுதியேல்" என்ற தேவாரம் நன்கு விளக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. பசு வழிபாடு

பசு வழிபாடு. ஆலய வழிபாட்டின் பின் சிவலோகத்திலே சிவ சந்நிதியின் இடபதேவர் பக்கலிலிருந்து சிவனருளால் நீங்கித் திருப்பாற் சமுத்திரத்தின் தேவாமிர்தத்துடனுதித்துப் பூலோகத்தில் வந்து, சகல தேவர்களும், தீர்த்தங்களும் பொருந்துமுருவினதாய் சிவபூசைக்குரிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம், கோரோசனை என்னுந் தவ்வி யங்களைத் தருவனவாய் நந்தை, சுவத்திரை, சுரவி, சுசிலை, சுமநதை என்னும் பேதத்தனவாயுள்ள கோமாதாக்களை முறைப்படி அமைக்கப்பட்ட கொட்டிலில் முறைப்படி சேர்த்துப் பத்திர புஷ்ப முதலியவற்றால் நன் றாகப் பூசித்து, ஹேகோமாதாவை (ஓ லோகமாதாவே) லோகசம்ரட் சணார்த்தம (அது உலகரட்சையின் பொருட்டு) அமிர்தத்துடன் உதித்த காமதேனு இவ்வுணர்வையேற்றுக் கொள்ளுக. இது எனது நித்தியவிரதம் என்று தனித்தனி பிரார்த்தித்துப் பசுக்களுக்கு ஒரு வாயுறை அறுகம் புல்லளித்துப் போற்றுக. பசு உலகுக் கின்றியமையாததென்பதும் அத னாலே உலகமும், உலகினரும் சுத்தியடைய வேண்டுமென்பதும் அது தரும வடிவினமென்பதும் அதற்குத் தீங்கு செய்தல் நீங்கமுடியாத குற்றமா மென்பதும் பசுபதியாகிய இறைவனுக்கு வாகனமாந் தகுதியுடையதென் பதும் சாந்த குணத்தின் தாயகமாய் உள்ளதென்பதும், அது சகல சாஸ்திரங்களாலும் அந்தண சாதியோடு அடுத்துக் கூறப்படுவதென்பதும், சைவர்களாகிய நம்மெல்லார்க்கும் ஒப்பமுடிந்ததாதலின் அப்பசு நம்மவர் களால் நித்தியமும் வழிபடற்பாலது. இதுபற்றியே ஆளுடையாரும் "வாழ்க வந்தணர் வானவரானினம்" என்று வாழ்த்தியவாறுங் காண்க.

## 09. போசனம்

பின்பு போசனம் செய்க.

"ஒருபோது யோகியே ஒண்டொடியிக்கை மாதே
இருபோது போகியே யென்ப — திரிபோது
ரோகியே நான்கு போதுமுண்பான் உடல்விட்டுப்
போகியே யென்றுபுகல்"

என்றபடி இருபோது உணவே லௌகீகர் யாவர்க்கும் வேண்டிய தாகும். பகலிரவாகிய அவ்விரு பொழுதுணவின் மேற்பட்ட உணவு நோய்க்கேதுவாம். "யாவர்க்குமா முண்ணும்போது ஒரு கைப்பிடி" என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் சொற்படி அப்போது சற்பாத்திரராகவுள்ள யாவர்க்காயினும் இயன்றளவு உணவு கொடுத்தல் வேண்டும். சமசாதியாராய், சிவதீட்சை பெற்றவராய், நியமாசாரமுடையவராயுள்ளவருடன் வெளிச்சமுடையதாய், பந்திக்குரியரல்லாதவர் புகப்பெறாததாய், கோமயத்தினாலே மெழுகப் பட்டதாயுள்ள போசன சாலையில் சுகாசனமாயிருந்து வாழையிலை முதலிய போசன பாத்திரங்களுள் இயன்ற பாத்திரங்களைச் சலத்தினாலே கழுவி, சுத்திசெய்து இட்டு அதில் லவணம், கறி, அன்னம், பருப்பு, நெய் இவைகளைப் படைத்து விதிப்படி சுத்தி செய்து சிவபெருமானுக்கும், அக்கினிக்கும், குருவுக்கும் நிவேதனம் பண்ணி அன்னத்திலே பிசையத் தக்க பாகத்தை வலக்கையினால் வலப்பக்கத்திற் பிரித்துப் பருப்பு, நெய் யுடன் பிசைந்து சிந்தாது புசித்துப்" பின் இரசம், புளிக்கறி, மோர் என் பவற்றுடனும் இடைக்கிடை சேர்த்து முடிவில் வெந்நீரேனும், தண்ணீரே னும் உட்கொள்க

உண்ணும்போது உமிழ வேண்டியதை இலையின் முற்பக்கத்தைத் தூக்கி அதன் கீழுமிழ்க. உண்பதற்கிடையில் உப்பும் நெய்யும் படைத் தல், போசனத்துக்கு உபயோகமாகாதவார்த்தை பேசல், சிரித்தல், நாய், பன்றி, காகம், கோழி, பருந்து, கழுகு என்பவைகளையும்" புலையர், ஈனர், பூப்புடையவள் என்பவர்களையும் பார்த்தல் முதலியனவாக. அன்னத் திலே மயிர், ஈ, எறும்பு, கொசுகு முதலியன காணப்படின் அவைகளைச் சிறிது அன்னத்தோடு புறத்தே நீக்கிக் கைகழுவிச் சுத்தி செய்து வாய் கொப்பளித்து ஆசமனம் பண்ணி விபூதி தரிக்குக. பின்னர்க்குச் சுத்தியின் பொருட்டு. இல்வாழ்வார் ஒருமுறை தாம்பூலமிடுக.

## 10. பொருளீட்டல்

கல்வி கற்பித்தல், கிருஷிகம், வாணிகம், கைத்தொழில், இராச சேவை முதலிய தொழில்களுள் தமக்கியைந்த ஒரு தொழிலை, முறைப் படி செய்து, இம்மையும் மறுமையும் பயப்பதாகிய பொருளைத் தரும் வழியிற் சம்பாதித்தல் வேண்டும்.

"அருளிலார்க்கவ் வுலகமில்லை
பொருளிலார்க்கிவ் வுலகமில்லாகி யாங்கு"

என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலவிற் பிறக்கும் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்குமுயர் நலமெல்லாம்
அருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்துவிடும்"

என்றும் பெரியோர் பணித்தவாறு இவ்வுலகவின் பத்துக்கு இன்றியமையாததாகிய பொருளைத் தேடும் வகையில் சோம்பலின்றி யாவரும் முயற்சியுடையாராயிருத்தல் வேண்டும். பொருள் சேர்ப்பதற்கு பல தொழிலுமுளவாயினும், பயிரிடுந் தொழிலும் கைத்தொழிலுமே உலகிற்கு இன்றியமையாதனவாய் பெரும் பொருள் வரவுக்குக் காரணமாம். இவ்விரு தொழிலும் விருத்தியில்லாத தேசம் பொருள் விருத்தியற்றதாம். மனுஷருக்கு முதலில் வேண்டிய உணவும், உடை முதலியனவும் அவற்றானாயே அமைகின்றன. ஆகவே அவை நமக்குப் பெரிதும் பயன்படுந் தொழிலாமென்பது தெள்ளிது. எவ்வகையினும் தீவினைவிட்டிட்டியதே நமக்குதவும்.

## 11. சிவகதை கேட்டல்

அதன் பின்னர் சாயங்காலத்தில் சிவபுராணங்களைக் கேட்டல் வேண்டும். தாம் முன்னறிந்த சரித்திரங்காளயினும் கேள்வியினால் பலனுள்ளதாக அச்சரித்திரங்களின் தத்துவார்த்தங்கள் சில தாமறியாதனவுமிருக்கும். அன்றியுமிடையறாத சிவத்தியானத்திற்கேதுவாகும். "செவியுணர்விற்கேள்வியுடையார் வினைவின் ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து" எனவும் "இருள் சேரிரு வினையுஞ் சேராவிறைவன் பொருள் சேர்புகழ் புரிந்தார் மாட்டு" எனவும் "செவிக்குணர் வில்லாத காலத்திற் சிறிது வயிற்றுக் கீயப்படும்" என்றும், சென்னாப் போதார் திருவாய் மலர்ந்தருளியவாறு இவ்வுலகத்துத்தேவரோடொப்ப இன்புறுதற்கும் இருவினை நீங்கி நித்தியானந்தமுலகுறுதற்கும் இறைவனதுண்மை சேர்ந்த புகழ்களாகிய கதைகளைச் செவிக்குணவாகக் கேட்டலே காரணமாதலால், மற்றைய கதைகளை விட்டு, சிவகதைகளைக் கேட்டலே ஆவசியகமாம்.

"செவிகாள் கேண்மின்களோ—சிவ
னெம்மிறை செம்பவள மெரிபோல்மே
னிப்பிரான்றிற மெப்போதுஞ் செவி
காள் கேண்மின்களோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் சைவத்திரு நெறித்தமிழ்மாலைச்சிவ கதைகேட்டல் நித்தியகருமமென்பதை நிலைநாட்டும்.

## 12. மாலைக்கடன்

அஸ்தமயன காலத்தில் அவசிய கருமம் முடித்து சாயங்கால வந்தனம் முடித்து, ஆலய சேவை பண்ணிச் சிவகதை கேட்டு, இரவு எட்டு நாளிகை வரையில் போசனஞ் செய்க. அப்போது விளக்கவியின் அவ்வன்னத்தை வலக்கையினாலே மூடி விளக்கேற்றி வருமளவும் ஸ்ரீபஞ்சாட்சரத்தை மானசமாகச் செபித்துக் கொண்டிருந்து, விளக்கேற்றியபின், வேறன்ன மிடுவித்துக் கொள்ளாது, அவ்வன்னத்தையே புசித்துக் கொண்டெழும்புக.

## 13. நித்திரை

இரவு பத்து நாளிகையளவில், மிருதுவாகிய சயனத்தில், கிழக்கேயாயினும் மேற்கேயாயினும், தெற்கேயாயினும் தலைவைத்து வேறு சிந்தனையின்றிச் சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டு சுகமாய் நித்திரை செய்க. இக்கருத்து நோக்கி

"தன்மனை கிழக்காகும் தரணி
யெங்மனத்தெற்கே - பிறர்மனை
மேற்காம் பெரியவர
சொன்னசகுந்திரமே"

என்று பாடியிருக்கின்றனர். கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும், சகல விந்திரியங்களிலும் நயனம் பிரதானமாகும். அதனது சிருட்டியும் மிகவிசித்திரமானதாகும். அது கேடின்றியிருப்பதற்கு நித்திரையின்றியமையாதது. ஆதலால் பெரும்பாலும் முன்னிரவின் பிற்காற்றில் நித்திரைக்குப் போதல் வேண்டும். அதிக நித்திரையும் (அதிகபோசனமும்) நமது தேகத்தை, தூலதத்திற்றூலமாக்கி ஒரு தொழிலுக்கு முதவாமற் செய்துவிடும். பெரும்பாலும் பதினைந்து, பதினாறு நாழிகை நித்திரையே போதியனவாகும். பெருஞ் செல்வவாழ்க்கையும், பேரறிவும் பெற்றிருந்த பெரியோரெல்லாம், அதிகநித்திரையுடையராக இருந்தாக நாமறியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஆயுளிற் பாதியை நித்திரை கைக்கொள்ளவிடின் மற்றைய நித்திய கருமங்களை இழந்து விடுவோமாதலால் குறித்த நித்திய கருமங்களைக் குறித்த காலங்களில் முறைப்படி செய்வதே முறைமையாகும்.

இவ்வாறு நித்திய கருமங்களைக் கிரமமாகச் செய்து வருவோர், இம்மையில் அரோக திடகாத்திரராயும், தீர்க்காயுசுமான்களாயும், சற்புத்திர பௌத்திராதியருடன் பெருஞ் செல்வ வாழ்க்கையால், இன்பமனுபவத்து மறுமையில் சிவ சத்திப் பெருக்கத்தால் ஸ்ரீகண்ட பரம சிவனாரது உலகத்தையடைந்து நித்தியானந்த முறுவர்.

சுபம்.

திருச்சிற்றம்பலம்


**ஸ்ரீலஸ்ரீ. மு. சுந்தரலிங்க தேசிகர்**

"சுத்த கணித சோதிடர்"

"சித்தாந்த சேகரம்"

"சைவப் பேரறிஞர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வார்த்தைகள் போதுமா...

உன் சேவையை வர்ணிக்க,

உன் சேவைக்கு முன்னால் வடக்கு கிழக்கு மாகாணம்

ஒரு கணம் தலைசாய்க்கிறது

*ஜீ கிருஷ்ணமூர்த்தி*
*தலைமைச் செயலாளர்,*
*வடக்கு கிழக்கு மாகாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நெஞ்சம் மறவாது!*

திரு. ஸ்ரீரங்கன் கணக்காளர் எனது அமைச்சில் சில வருடங்கள் கடமையாற்றி என் நன்மதிப்பை பெற்ற ஓர் உயர்ந்த அந்தஸ்த்தை பெற்ற உத்தியோத்தர். அன்னார் நேர்மை, உறுதி, இதயசுத்திக்கு ஓர் எடுத்துக்காட்டு. நான் கொடுத்த பெரும் சுமைகளை மனமுவந்து ஏற்று தனது கடமையை செவ்வனே நிறைவேற்றிய அவரை என்னால் எப்படி மறக்க முடியும்.

பிரிவுகள் அரச சேவையிலும் உலக வாழ்க்கையிலும் யதார்த்தம். ஆனால் திடீர்ப் பிரிவு அதுவும் ஒரு கணப் பொழுதில் நடந்த சம்பவம் என் நெஞ்சை உலுக்கிவிட்டது. அன்னாரின் மனைவியும் பிள்ளைகளும் இப்பிரிவை எப்படித் தாங்குவார்கள் என நான் எண்ணும்போது நெஞ்சம் விம்முகிறது.

ஸ்ரீரங்கன் அரச உத்தியோகத்தர்களில் ஓர் உதாரண புருஷர் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

வ. அ. திரேசா
செயலாளர்
சுகாதார சேவைகள் அமைச்சு.

**APPRECIATION**

The Sudden demise, under tragic circumstances, of Late Mr. Rasiah Sri Rangan, Accountant, Ministry of Health NEP, came as a shock to me. I knew him for the last two years and he functioned as acting Accountant of the Rehabilication and Reconstruction section in the Kachcheri, Trincomalee. He moved with me more as a close friend than as an Accountant under me. He had sterling qualities and was honest, sincere and hard working public officer. He took up assignment with plessure and never grudged in the execution of his duties. it is very unfortunate that this country has been deprived of his invaluable service at this juncture. he had a large circle of friends who often looked at him for advice and guidence.

It is dishertening to note that his life has been spirited away at a time when his help and assistance are most neede by his family. I share the grief of theloss of Sri Rangan with his beloved wife and children.
May his Athma attain Moksha.

*S. D. Chandradasa*

**Government Agent & District Secretary**

Trincomalee District

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dear Sri Rangan,

You became a bright star
at our Health Sector
amongst Dark Cloudy Sky
you became a Hero
to put your section of
finance in order
amongst the Clan of Morgans.

You faced so much resistance
that was a dust of your feet
you keep your smile on always.
We who missed you too much
who lost your smile and
helping assistance.

Who on earth will replace.

May you attain Ethernal Rest in
Heaven.

Friends.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *அவசர கால ஒழுங்கு விதிகள்*

### *ஒரு நோக்கு.........*

மரணங்கள் மலிந்த எமது மண் இன்று சாக்காடாகிக் கொண்டிருக்கின்றது. போர் அரக்கனின் கோரப்பற்கள் வடக்கு கிழக்கை, ஏன் முழுத்தீவையுமே குதறிக்கொண்டிருக்கின்றன. துப்பாக்கிகள் சடசடக்கும்.... அப்பாவிகள் அநியாயமாக வீதிகளில் சாய்வர். ஷெல் வந்து விழலாம் குண்டு வந்து விழலாம், எந்தக்கணமும் எதுவும் நடக்கலாம். இதுதான் இன்று தமிழர் வாழ்வு. வீதியோரச் சோகங்கள் இன்று நிரந்தரமாகிப் போச்சு.

ஏன் துப்பாக்கிகளுக்கும் குண்டுகளுக்கும் சளைத்தவைபல்ல சீருடை வாகனங்கள். உட்துறைமுக வீதியில் "ரக்" மோதி இருவர் பலி, ஜிப் மோதி சிறுமி பலி இது காளிகோவிலடியில் செல்வநாயகபுரத்தில் சீருடை வாகனம் மோதி பாடசாலைச் சிறுவர்கள் படுகாயம். இவை திருமலையின் அண்மைக்காலச் சோகங்கள்.

இன்றைய சோகங்களுக்கெல்லாம் முழுமுதற் காரணமாக இருப்பது நாட்டில் அமுலிலிருக்கும் அவசரகால விதிமுறைகளேயாகும். அவசரகால விதிகளினால் அப்பாவிகளின் ஆயுள்கள் அவசரமாக முடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படி என்ன தான் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது இந்த அவசரகால விதிகள். அதுபற்றி இங்கு ஆய்வு செய்கின்றார் சட்டத்தரணி ஜனாப் A.W.A.சத்தார் அவர்கள்.

அரச இயந்திரம் முக்கியமாக மூன்று பிரிவுகளைக் கொண்டது. 1. சட்டமாக்கல் பிரிவு 2. நிறைவேற்றுப் பிரிவு 3. நீதித் துறைப்பிரிவு. இம் மூன்று அதிகாரங்களும் ஒரு அரசின் முக்கியமானதும் தலையாயதுமான அதிகாரங்களாகும். சட்டமாக்கல் அதிகாரம் பாராளுமன்றத்துக்கும் , நிறைவேற்று அதிகாரம் அமைச்சர் அவைக்கும் , நீதித்துறை அதிகாரம் நீதிமன்றங்களுக்கும் உருத்தாக்கப்பட்டுள்ளன. ஒன்றினது அதிகாரத்தை இன்னொன்று பிரயோகிக்க முடியாத அதே வேளை, ஒன்றினது அதிகாரம் இன்னொன்றுக்கு கையாளிக்கப் பட முடியாது என்பதும் அரசியல் சித்தாந்த விதியாகும். அதாவது அதிகார வேறாக்கம் (Seperation of power) ஒவ்வொன்றுக்கும் இடையில் இருப்பதோடு கையளிக்கப்பட முடியாததாகவும் இருக்க வேண்டும் என்பதாகும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல் அரசின் முக்கிய அதிகாரமான சட்டமாக்கும் அதிகாரம் பாராளுமன்றினால் செயற்படுத்தப்படுகிறது. இந்த அதிகாரத்தை பாராளுமன்றம் வேறெவற்றுக்கும் கையளிக்கமுடியாது என்பது ஒரு அரசியல் சித்தாந்த விதியாக இருந்த போதும் விதிவிலக்கான சில சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்தினுடைய இவ்வதிகாரத்தை வேறு சிலர் பிரயோகிக்க கூடியதான சில ஏற்பாடுகள் இடம் பெற்றுள்ளன. அதாவது பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் சட்டம் இயற்றும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குகின்றது. அவ்வாறு ஜனாதிபதியால் சட்டம் ஆக்கப்பட்டு அது பிரகடனப்படுத்தப்படும் போது அது அவசரகால விதிகள் என அழைக்கப்படுகின்றன. பொதுமக்கள் பாதுகாப்புச்சட்டத்தின் 2ம் பிரிவு எவ்வாறான சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி இவ்வாறான அதிகாரத்தை பயன்படுத்தலாம் என குறிப்பிடுகின்றது. அதன்படி பொதுமக்கள் பாதுகாப்பு அல்லது பொதுஒழுங்குப் பாதுகாப்பு அல்லது பொது வாழ்வின் அவசியச் சேவைகள் வழங்கல்களை சீராக வைப்பது சம்பந்தமான உடனடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகள் ஏற்படும் போது இவ்வாறான அவசர ஒழுங்கு விதிகளை ஆக்கலாம். பாராளுமன்றத்தின் இவ்வதிகாரம் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டிருப்பதன் முக்கிய காரணம் மேற்கூறிய சந்தர்ப்பம் எழுகின்ற போது பாராளுமன்றத்தைக் கூட்டி சட்டம் ஆக்குவதில் காலதாமதம் ஏற்பட்டு அரச இயந்திரம் பாதிப்படையும் என்பதனாலாகும்.

மேலும் அவ்வாறு ஆக்கப்படுகின்ற அவசரகால ஒழுங்கு விதிகள் ஏனைய சட்டங்களை விட மேலோங்கி இருக்கும் என்பது மட்டுமல்ல அவ்வாறான சட்டங்களின் வலிதான தன்மை பற்றி எந்த நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்பபாடமுடியாததுமாகும். மேலும் அவசரகால ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தும் எந்த ஒரு நபருக்கெதிராகவும் சட்டமா அதிபரின் எழுத்து மூலமான அனுமதியின்றி எந்த வித குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்க முடியாது என்பதுடன் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்படுகின்ற எந்த ஒரு நபரின் செயல்களுக்காகவும் குற்றவியல் அல்லது குடியியல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட முடியாது.

அவசரகால ஒழுங்கு விதிகள் சம்பந்தமாக முழுமையான ஓர் ஆய்வினைச் செய்வது நீண்டதாகவும் தேவையற்றதுமாக இருக்கும் என்பதால் நடைமுறைப்பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட விடயங்களைப்பற்றி மட்டும் எடுத்துரைப்பது உசிதமெனக் கருதுகின்றேன். முதலில் தேசிய நலன் கருதி பொது ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்காக அவ்வாறு செய்தல் அவசியமாதென்று அல்லது உகந்ததென்று அபிப்பராயப்படின் இலங்கையில் வதியும் எவரேனும் ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்படுவதான அல்லது இலங்கையின் துறைமுகத்தில் உள்ளதான ஏதேனும் கலம் அல்லது வானூர்தி உள்ளிட எந்தப் பொருளையும் தேவைக்கெடுக்கலாம்.அத்தகைய தேவைக்கெடுத்தல் தொடர்பாக அவசியமென்று அல்லது உகந்ததென்று அபிப்பிராயப்படும் அத்தகைய பணிப்புகளையும் கொடுக்கலாம்.

மேலும் பிரசுரங்கள் சம்பந்தமான அவசரகால ஒழுங்கு விதிகளும் கரிசனைக்கு எடுக்கப்பட வேண்டியதாகும். தேசிய பாதுகாப்பின் நலனுக்கு அல்லது பொது அமைதியை நிலை நாட்டுவதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்கு பங்கமாக இருக்கும் அல்லது பங்கமாக இருக்கக்கூடியகருமங்களை அல்லது படையினர் கலகம், கலகம் உள்நாட்டு குழப்பம் என்பவற்றை அல்லது தகுதி வாய்ந்த அதிகாரியின் அபிப்பிராயப்படி பொது அமைதியை நிலை நாட்டுவதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும், சேவைகளையும் பேணுவதற்குப் பங்கமாக இருக்கக்கூடியதும், அப்போதைக்கு வலுவிலிருப்பதுமான ஏதேனும் சட்டத்தின் மீறுகையைப் புரிவதற்குத் தூண்டும் அல்லது ஊக்குவிக்கும் கருமங்களை இலங்கையில் அல்லது இலங்கையில் உள்ள ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பில் வெளியிடுவதை அல்லது இலங்கையிலிருந்து இலங்கைக்கு வெளியே உள்ள இடங்களுக்கு ஒலிபரப்புவதை தடுப்பதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு அவசியமெனத் தகுதி வாய்ந்த அதிகாரி கருதுவாராயின் அத்தகைய வழிகளை அவர் எடுக்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புகளையும் விடுக்கலாம். அத்துடன் எவையேனும் பணிப்புக்கள், செய்தி அறிக்கைகள், ஆசிரியத் தலையங்கங்கள், கட்டுரைகள், ஆசிரியர்க்கான கடிதங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேலிச்சித்திரப்படங்கள், கருத்துரைகள் என்பன உட்பட ஆவணங்கள், முறைக்குறிப்புகள், ஒளிப்படங்கள், இயக்கப்படத் திரைச்சின்னங்கள்/ தன்னியக்க அச்சுக்கருவி தந்தி தொலைக்காட்சி பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகள் தொடர்பான கருமங்களை ஒலிபரப்புதல் ஆகியன வெளியிடப்படுவதற்கு முன்னர் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்படுதல் அல்லது காட்டப்படுதல் வேண்டும்.

மேலும் அவசரகால ஒழுங்கு விதிகள் சம்மந்தமாக பார்க்கும் போது, சந்தேகப்பட்ட ஆட்களை மேற்பார்வை செய்தல், ஆட்களை தடுப்புக் காவலில் வைத்தல், தேடுதல், கைப்பற்றல், கைது செய்தல், தடுத்து வைத்தல் என்பனவும் கருத்துக்கெடுக்கப்பட வேண்டியதாகும். இவ்விடயங்கள் தொடர்பில் இலங்கையின் சாதாரண சட்டமான குற்றவியல் நடவடிமுறைச் சட்டம் ஒன்று இருப்பதும் அவதானிக்கப்பட வேண்டிய தொன்றாகும் அச் சாதாரண சட்டங்கள் பொலிசாரினால் நடைமுறைப்படுத்தப்படுவதும் அவதானிக்கப்பட வேண்டிய தொன்றாகும். ஆனால் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் ஒரு குற்றத்தைப் புரிகின்ற அல்லது புரிந்துள்ளதாக ஐயுறுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ள யாரேனும் ஆள் ஒருவரை பொலிஸ் உத்தியோகத்தர், இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படை, இலங்கை வான் படை என்பவற்றிலுள்ள யாரேனுமுறுப்பினர் அல்லது இவ்வொழுங்கு விதியின் கீழ் செயலாற்றும் படி ஜனாதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனுமொருவர் தேடுகை செய்யலாம். அவ்வாறு தேடுகை செய்வதற்காக தடுத்து வைக்கலாம், அல்லது பிடியாணையில்லாது கைது செய்யலாம்.மேலும் அக்குற்றம் புரிவதில் அல்லது அதன் தொடர்பாக உபயோகிக்கப்பட்ட ஏதேனும் வாகனம், மரக்கலம், பொருள், பதார்த்தத்தை தேடுகை செய்யலாம், கைப்பற்றலாம், அகற்றலாம் அல்லது தடுத்து வைக்கலாம்.

இந்த ஒழுங்கு விதிகளின் கீழ் எவரேனும் ஒரு ஆள் கைது செய்யப்பட்டும், தடுத்து வைக்கப்பட்டும் இருக்குமிடத்து அத்தகைய ஆள், ஒவ்வொரு விடயத்தினதும் சூழ் நிலைகளைக் கருத்தில் கொண்டு நியாமான ஒரு காலத்துள், எந்தச்சந்தர்ப்பத்திலும் அத்தகைய கைது செய்தலின் பின்னர் முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் எவரேனும் நீதவான் முன்நிலைக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும். மறுவிதமாகப் பார்ப்பின், கைது செய்யப்பட்டு முப்பது நாட்களுக்கு நீதிமன்றுக்கு தெரியப்படுத்தாமல் வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் சாதாரண சட்டத்தின்படி 24 மணித்தியாலங்களுக்குள் நீதவான் ஒருவரின் முன் தெரியப்படுத்த வேண்டும் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.இவ்வாறு முப்பது நாட்களுக்குள் கைது செய்யும் அதிகாரிகள் தங்கள் கட்டுக்காப்பில் வைத்திருக்கலாம் என்பதானது பல விதமான அதிகாரத்துஸ்பிரயோகங்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் வழிவகுப்பதாக அமைகின்றதென்பது அனுபவரீதியாக நாம் கண்ட உண்மையாகும்.

> *நாளென்ன கோளென்ன*
> *நம் பலமென்ன பதவியென்ன*
> *தேசத்தின் விதிமுன்னே*
> *நாம் தேவையற்ற பொருள்தானே*
>
> **ம.செல்வின் இரேனியஸ்,பணிப்பாளர்**
> **தொழில்துறைத் திணைக்களம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே சாதாரண சட்டங்களுக்கும் அவசரகால ஒழுங்கு விதிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளும் தாக்கங்களும் உணரப்படவேண்டியதாகும். சாதாரண சட்டங்கள், நாட்டின் சாதாரண சூழ்நிலைகளில் மக்கள் நலன் கருதி நிலையாக உள்ளதாகும். ஆனால் அவசரகால ஒழுங்கு விதிகளோ மட்டுப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் அமுலில் இருப்பதாகவுள்ளது. அது நீண்ட காலத்துக்கு அமுல்படுத்தப்படுமாயின் பல விதமான துஸ்பிரயோகங்களுக்கு இடமளிப்பதாக அமைந்துவிடும். உதாரணமாக நமது நாட்டை எடுத்துக் கொள்ளலாம். கடந்த பல வருடங்களாக நமது நாட்டில் அவசரகால ஒழுங்கு விதிகள் அமுலில் இருப்பதால் ஏற்பட்ட, ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற, ஏற்படப்போகின்ற நிலைமைகளை கருத்தில் கொண்டு உணர்ந்து கொள்ளலாம்.

சட்டத்தின் ஆட்சி ( RULE OF LAW ) பற்றியும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டாகவே வேண்டும். சட்டத்தின் முன் யாவரும் சமன் என்பது சட்ட ஆட்சியின் முக்கிய கோட்பாடாகும். சாதாரண சட்டங்களைப் பொறுத்தவரையில் சட்டத்தின் ஆட்சி நம் நாட்டில் ஓரளவு கடைப்பிடிக்கப்படுகின்றது எனக் கூறலாம். அதாவது சட்டத்தை அமுல்படுத்துகின்ற அதிகாரிகள் கூட தவறு செய்கின்ற போது தண்டிக்கப்படக் கூடிய சூழ்நிலைகள் பெரும்பாலும் நிலவுகின்றன. அதற்கேற்ற வகையில் சாதாரண சட்டங்கள் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களால் பல்வேற இன, மத, மொழி பேசுபவர்களால் வாதப்பிரதிவாதம் செய்யப்பட்டு பாராளுமன்றத்தினால் இயற்றப்படுவதால் ஓரளவாவது நம் நாட்டில் சட்டத்தின் ஆட்சி செல்வாக்கை செலுத்துகின்றது எனக் கூறலாம். ஆனால் அவசரகால ஒழுங்கு விதிகளோ ஒரு தனி நபரினால், ஒருமதத்திற்கு, இனத்துக்கு, ஒரு மொழிக்கு உரித்தான ஒருவரால் ஆக்கப்படுகின்றபோது அங்கே சட்டத்தின் ஆட்சியினுடைய கோட்பாடுகளைக் காண்பது மிகவும் அரிதாகவுள்ளது. ஏனெனில் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் அவசரகால ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தும் நபர்க்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பானது, சட்டத்தின் முன் யாவரும் சமன் என்ற சட்ட ஆட்சியின் அடிப்படைக் கோட்பாட்டை அப்படியே முழுமையாக அழித்தொழிப்பதாகவுள்ளது. அதாவது அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் செயற்படும் நபர்கள், அவர்கள் எதையும் செய்யலாம் என்ற தைரியத்தை வழங்குவது மட்டுமல்ல, எல்லாவற்றையும் செய்யலாம் என்ற நிலைப்பாட்டை வழங்குகின்றது.

மேலும் அவசரகால ஒழுங்கு விதிகளை ஒத்ததான நம் நாட்டில் வலுவில் இருக்கும் பயங்கரவாத தடுப்புக் கட்டளைச் சட்டமும் சேர்ந்து இன்னும் மோசமான விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இந்த இரண்டு சட்டங்களிலும் சட்ட ஆட்சியின் கோட்பாடுகள் புறக்கணிக்கப்படுவதற்கான நிலைமைகளை உருவாக்கியிருப்பது மட்டுமல்ல தனி மனித சுதந்திரம், மனித உரிமைகள் மீறப்படுவதற்கான நிலைமைகளையும் உருவாக்கியிருக்கின்றன. இப்படியான சட்டங்கள் அமுலில் இருக்குமானால் அதனால் ஏற்படுகின்ற நன்மைகளைவிட தீமைகள் முந்திக் கொண்டு சென்று எதிர்பார்த்த நிலைமைகளைவிட முற்றிலும் வேறுபட்ட விளைவுகளை ஏற்படுத்திவரும் என்பது நிச்சயம்.

இறுதியாக இலங்கை போன்ற பல இன, பல மொழி பேசும், பல மதங்களைப் பின்பற்றுபவர்களைக் கொண்ட ஒரு நாட்டில் நீண்ட காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுலில் இருக்கும் அவசரகால விதிகள் பாதமகமான விளைவுகளையே நாட்டில் ஏற்படுத்தும். இதன் பாதிப்புக்களை உள் நாட்டில் பேசுவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.சர்வதேச அரங்குகளில் இவ்வாறான ஒழுங்கு விதிகளின் நீண்ட காலத்தன்மையையும், அமுல்படுத்துபவர்களின் அசட்டையையும், துஷ்பிரயோகத்தையும் சுட்டிக்காட்டி வெளிப்படுத்துவதன் மூலம், ஏற்படுகின்ற இழப்புக்களையும், கொடூரமான தன்மைகளையும் ஒழித்துக்கட்டலாம். இவை எல்லாவற்றிற்கும் மனித உணர்வுகளும், மனித நேயங்களும், இறைநம்பிக்கையும் முதலிடம் கொடுத்து வளர்க்க வேண்டியது அவசியத்திலும் அவசியமாகின்றது.

A.W.A. *சத்தார்* - L.L.B (*இலங்கை*)
**சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்**
**பெரிய கிண்ணியா கிண்ணியா**-04.
**தொலைபேசி** : 026-36417

உன்னைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டுள்ளேன் ஆனால் உன்னோடு எனக்கு அதிகம் அறிமுகமில்லை நான் கல்வியமைச்சின் செயலாளராக கடமையேற்றபோது நீ கல்வியமைச்சில் இல்லை ஆனாலும் கல்வியமைச்சில் நீ செய்த சாதனைகளை அறியக்கூடியதாக இருந்தது.

மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் கணக்குப்பதிவினராக இணைந்த நீ, கல்வித் திணைக்களத்திலேயே கணக்காளனாக உயர்ந்து கல்வியமைச்சிலும் கணக்காளனாக பணியாற்றினாய். உன் வளர்ச்சி கல்வியமைச்சிலேயே அமைந்திருந்ததையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

உன்னைப்பற்றி நான் அதிகம் அறிந்திராவிட்டாலும் உன் இறுதிச்சடங்கில் திரண்ட மக்கள் கூட்டத்தில் இருந்து உன் ஒவ்வொரு பக்கத்தையும் உணர்ந்து கொண்டேன்.

இத்தனை இனிமையான நீ இன்று இல்லை என்னும் போது என் இதயத்தில் எங்கோ ஓர் மூலையில் ஓர் கசிவு.

உன் ஆதமசாந்திக்காக கல்வியமைச்சின் சகல ஊழியர்களும் இறைவனை வேண்டுகின்றோம்.

**சுந்தரம் டிவகலாலா**
**செயலாளர்**
**கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை**
**அமைச்சு.**

மைத்துனர் ஸ்ரீரங்கன் ஒரு சிறந்த விளையாட்டு வீரன் ஒரு காலத்தில் யாழ் மாவட்ட உயரம் பாய்தல் சாதனையை நிலைநாட்டியவர்.

ஆ. சி. குணரெட்ணம்,
உதவிப் பணிப்பாளர்,
விளையாட்டுத்துறை, வ.கி.மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *நண்பர்கள் பிரலாபம்*

ஓர் இரண்டு மாதங்கள் உருண்டோடி விட்டதையா
உம்மை நாம் ஒரு கணமும் மறந்ததில்லை
யார் எமக்குத் துணை என்று நீ பிரிந்தாய் நண்பா!
யாவையுமே நீ வெறுத்து ஏன் மறைந்தாய் !
பார்தனிலே நீண்டகாலம் வாழ்ந்திருக்க
பரமசிவன் அருள் உமக்குக் கிடைக்கவில்லை
ஊரார் எமக்கு சேவை பல செய்திடினும்
உமக்கு இணையாகிடுமோ நண்பா!

ஸ்ரீரங்கா என்னும் நாமம் கொண்ட இனியவனே
இனிமை எல்லாம் இழந்து விட்டோம் உன் பிரிவால்
துன்பம் பல சூழ்ந்த போதும் எம்மவர்க்கு
துயரமதைத் துடைத்துவிட யாருளரோ !
அன்பு கொண்ட உன் உள்ளக் கிடக்கையினால்
அமைதியோடு பேசிடுவாய் ஆறுதலாய்
வன்பு கொண்டு ஒரு பொழுதும் வாழ்ந்ததில்லை
வந்திடுவாய் சொப்பனத்தில் தானுமையா!

மரமொன்று நீரின்றி வாடுதல் போல்
மனைவி மக்கள் வாடுதையா உன் பிரிவால்
தஞ்சம் என்று வந்தவர்க்கு உன் சேவையில்
வஞ்சகம் செய்ததில்லை உன் வாழ்க்கையில்
சரமொன்றில் மலர்களெல்லாம் கருகினாற்போல்
உன் வாழ்க்கையும் கருகிப் போனதை எண்ணி
விடம் உண்ட நீலகண்டன் பாதங்களில்
வேண்டி நிற்போம் உன் ஆத்மாசாந்திக்காக!

### *சில நாட்கள் இவ்வுலகில்.*

பிறப்பதற்கு முன் எங்கிருந்தோம்
இறந்தபின் எங்கு செல்வோம்
இது எவருக்குமே தெரியாது
இடையில் சில நாட்கள் இவ்வலகில் ஸ்ரீரங்கன்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்
வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் ".

**கா.தி. இராஜகுலவீரசிங்கம்**
**பணிப்பாளர் - பாதீடு**
**வடக்கு கிழக்கு மாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## REMEMBERING SRI RANGAN

It is rather difficult to imagine that 45 days have passed since death of our beloved Accountant and Friend - Mr. R. Sri Rangan.

Being his collegue in the office, we were fortunate to get his guidence in the financial matters. One may be surprised at his wide horizons of knowledge in the Finance Field.

He was not only an expert in his profession, but also had a deep insight in to life. We were struck by his simplicity and his attitude towards life and human values.

He worked tirelessly and founded many choirs among different groups of people regardless of Race or Religion. Through his dedicated work he made many people happy........ and their happiness brought him his inner happiness.

He has left lasting impressions in the minds of people with whom he had worked and associated and will not be forgotten easily.

We never expected his death so soon. His sudden death was a great loss to his friends, associates and family. Rangan will be missed equally by his wife and sons, their friends and relations and all those who benefited in numerous ways from the generosity of his life.

May God grant him eternal rest and may his wife and sons find solace in the happy memories he has left behind.

Dr. E.G. Gnanakunalan
Acting Deputy Provincial Director of Health Services,
Trincomalee.

உயர்ந்த தோற்றம் நிமிர்ந்த பார்வை
எடுப்பான உடை மிடுக்கான நடை
மலர்ந்த முகம் வரவேற்றுகம் கண்கள்
இனிய குரல் தெளிந்த பேச்சு........
இதுதான் ஸ்ரீரங்கன்

**ந.ஜெபராஜா**, *கணக்காளர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணைந்தும் அணையாத தீபம்

எனது பேரன்புக்குரிய உடன்பிறவாச் சகோதரர் திருகோணமலை சுகாதாரத் திணைக்களக் கணக்காளர் திரு. இராசையா ஸ்ரீரங்கன் அவர்கள் இன்று எம்மிடையில் இல்லை என்பதை நம்பமுடியவில்லை. எல்லோருக்கும் இனியவனாகவும் கடமையே கண்ணாகவும் கொண்டு வாழ்ந்த இவர் கடமையின் போதே அமரராகிவிட்டார். "தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று". நண்பர் ஸ்ரீரங்கன் சேவையின் போதே புகழைத் தேடிக் கொண்டமையை அவரது மரணச் சடங்குகளிற் கலந்து கொண்ட மக்கட் கூட்டத்திலிருந்தே கண்டு கொள்ள முடிந்தது.

தமது இறுதி நண்பகல் உணவை தமது மனைவி மக்களுடன் முடித்துக் கொண்ட அமரர் நேராகவே கணனிப் பயிற்சிநெறிக்குச் சென்றிருக்கலாம். ஆனால் அவரது கடமை உணர்வும் விதியும் தூண்ட காரியாலயத்தில் சில அவசர காசோலைகளிற் கையொப்பமிடவெனச் சென்று திரும்பும் போது காலனால் கவரப்பட்ட சோகத்தை என்னவென்பது?. வாகன விபத்தில் படுகாயமடைந்த அவரை மரணத்தின் பிடியிலிருந்து மீட்பதற்காக திருமலை தள வைத்திய சாலையின் அனைத்து வைத்திய அதிகாரிகளும் ஏனைய உத்தியோகத்தர்களும் சுமார் இரண்டு மணி நேரம் மேற்கொண்ட பெருமுயற்சி வெற்றி பெறாதது விதியின்செயலே.

அமரர் ஸ்ரீரங்கன் என்னோடு சுமார் பதினைந்து ஆண்டுகள் வரை கூடவே சேவை செய்து பரஸ்பர அன்பைப் பரிமாறிக் கொண்டவர். அன்னார் தமது சேவையில் மேலதிகாரிகளிடம் காட்டிய விசுவாசம் கலந்த அன்பு கடமையிற் காட்டிய அர்ப்பணிப்பு நண்பர்களுடனும் ஏனைய உத்தியோகத்தர்களுடனும் சேவை நிமித்தம் தம்மை நாடி வந்தோரிடமும் காட்டிய அன்பும் பரிவும் கலந்த பக்குவம் இவையாவும் போற்றுவதற்குரியன. கணக்காளர் என்ற வகையில் விதிமுறைகளை வழுவாமல் பின்பற்றிய அதே நேரத்தில் அச் சேவையை மக்கள் சேவைக்கெனக் கிடைத்த சந்தர்ப்பமெனக் கொண்டு அவர் ஆற்றிய சேவை என்றும் எம் நினைவை விட்டகலாது.

அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு இச்சோகத்திலிருந்து அவரது அன்பு மனையாளும் குழந்தைகளும் விடுபட்டு அவர் காட்டிய வழியில் முன்னேற அவர் என்றும் வணங்கிய நயினை நாகபூஷணி அம்பாள் திருவருள் புரிய பிரார்த்திக்கின்றேன்.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போடுயிரிடை நட்பு

- திருக்குறள்

**அ. கெங்காதரம்பிள்ளை, பிரதம கணக்காளர்**
**சுகாதார அமைச்சு**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது உண்மை

காலையில் நான் கண்ட அந்த விபத்து என் மனதினை விட்டு அகல மறுத்தது. எமது கல்லூரி மாணவியை முட்டித்தள்ளி விட்டு நிற்காமல் சென்றுவிட்ட அந்த ஆட்டோ சாரதியின் வறட்டு வைராக்கியம் எனக்கு ஆத்திரத்தையே உண்டு பண்ணியது. ஆனால் வழமைபோலவே என் மனம் எந்தவித எதிர் நடவடிக்கை பற்றியும் முடிவெடுக்காமல் சோர்ந்து கவலையில் மூழ்கியது.

உலகில் இப்படியெல்லாம் துயர சம்பவங்கள், அவலங்கள், அட்டூழியங்கள் சம்பவிக்கக் காரணம் என்ன? இது வினை என்று கூறிவிட்டால் போதுமா? இரத்த வெள்ளத்தில் மிதந்த அந்த மாணவி என்ன தப்பினைச் செய்தாள்? அவளுக்கு இப்படியொரு தண்டனை தேவையா? அப்படியிருப்பினும் இது அதிகமில்லையா? மனிதாபிமானம் தான் கெட்டுப்போய்விட்டாலும் இறையருள் என்ற ஒன்று இருந்தும் இவற்றை ஏன் தடுப்பதில்லை?

அந்த மகளிர் பாடசாலையின் கருமங்கள் யாவும் தடையின்றி நடந்து கொண்டிருந்தன. எனக்குத்தான் பாடங்களில் மனம் ஒட்டவில்லை.

பல சம்பவங்கள் எனது மனத்திரையில் காட்சிகளை விரித்துக் கொண்டிருந்தன.

மறைந்த எம் மதிப்புக்குரிய கல்லூரி அதிபர் - எமது பாடசாலை வாசலிலேயே இரத்த வெள்ளத்தில் தோய்ந்த காட்சி, மாணவிகள் நாம் கதறி அழுத கோலங்கள். இவையெல்லாம் எமது மனதில் ஆறாத இரணங்களாகப் பதிவாகிவிட்டன. எமது அதிபர் சக ஆசிரியைகளுக்கும் மாணவ சமூகத்திற்கும் வழிகாட்டியமையைத் தவிர அவர் செய்த தவறு என்ன? காளி ஆச்சியின் அருளைத் தனக்காக மட்டுமன்றி எமக்காகவும் வேண்டி சந்நிதானத்தில் தவம் இருந்ததுதவறா?

எனது மனம் எடைபோட்டுக்கொண்டே இருந்தது. பாடசாலை முடிவுற்று ஆசிரியைகளும் மாணவிகளும் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். திடுக்குற்று சகஜ நிலைக்குத் திரும்பிய நான் வாசலுக்கு வந்தேன். மாணவிகள் நடந்தும் துவிச்சக்கர வண்டியிலும் ஆட்டோவிலும் விரைந்து கொண்டிருந்தனர். எவருக்கும் எப்போதும் எதுவும் நடக்கலாம்! எதற்கும் யாரும் உறுதியில்லை.

என்னை அன்பாக அழைத்துச் செல்ல அப்பாவோ அண்ணாவோ ஆர்வமாக ஓடிவருவார்கள். மோட்டார் வண்டியில் நான் அழைத்துச் செல்லப்படுவேன்.

அம்மா காப்பு விரதம். பத்து வருடங்களாக அனுஷ்டிக்கின்றாள். தான் நினைத்தது நடக்கும் என்பாள்.

அம்மா அன்புடன் சைவ உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். அப்பா கவலையுடன் அமர்ந்திருந்தார். ஏதோ ஒரு உரையாடல் - நான் வர முன்னரே நடந்ததன் பின்னணி அது.

அம்மா விளக்கினாள். "பிள்ளை! உன் அண்ணனோடு படிக்கிற சுரேஷின் அப்பாவாம். உன்னுடைய அப்பாவோடுதான் ஒரே கந்தோரிலை வேலை பார்க்கிறவராம் 'மேற் பிப்ரியிலை' வரேக்க ஆமி ட்ரக் அடிச்சு ஐ.சி. வாட்டிலை போட்டிருக்காம். உயிர் பிழைக்கிறதும் கஷ்டமாம்".

ஏற்கனவே நைந்து போயிருந்த என் மனம் உள்ளூர அழவே ஆரம்பித்தது. நாங்கள் உட்துறைமுக வீதியில் அமைந்த ஒரு வீட்டில் சில ஆண்டுகளுக்கு முன் வாடகைக்கு இருந்தபோது அவரையும் மனைவி பிள்ளைகளையும் நான் பல தடவை கண்டிருக்கின்றேன். அப்போது அவர்கள் உவர்மலை மத்திய வீதியில் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கேட்டேன், "ஏனம்மா அந்த அன்ரி உங்களுடன் காப்பு விரதம் அனுஷ்டிப்பதாக கூறினீர்களே அவ இப்போ கோயிலுக்கு வருவதில்லையா?".

"வராமல் என்ன பிள்ளை! விபத்து நடந்தபோது அவ காப்பு எடுப்பதற்காக என்னுடன்தான் கோவில் சந்நிதானத்தில் நின்றவ. செய்தி கேட்டுத்தான் அழுது கொண்டு ஓடினவ."

'காளித் தாயே! அந்த அன்னை உன்னைக் கேட்டது இதுவா? காப்ப விரதத்தின் பொருள்தான் என்ன? '

மாலையில் அப்பாவின் தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த அங்கிள் இறந்து விட்டாராம்!

அம்மா கோயில் போக ஆயத்தமதாகிக் கொண்டிருந்தாள். "பிள்ளை வெளிக்கிடு கோயிலுக்குப் போவோம் ".

நான் மறுத்துவிட்டேன். எனக்கு எதிலும் நம்பிக்கை பிறக்கவில்லை. எதிலும் பற்றுக்கோட இல்லாத மனநிலை. ஊமைக் காயங்கள். அப்பா கட்டளையிட்டார்- "கோயிலுக்குப் போ.....!"

நான் கேட்டேன், "எதற்காக அப்பா? நான் எதிலும் ஈடுபாடாக இல்லை. என்னை விட்டு விடுங்கள்"

அப்பா புத்திமதி கூறுவது போல் கூறினார். "இந்த உலகத்தில் நடப்பனவற்றின் ஒரு பகுதியைத்தான் பார்க்கின்றோம். மறு பக்கம் எமக்குத் தெரியாது. நன்மை என்று நாம் முன்னர் எண்ணியதெல்லாம் பின்னர் தீமையாக மாறுவதனையும், தீமையென்று நாம் துயருற்றவையெல்லாம் பின்னர் நன்மையாகவும் மாறியதையும் நாம் கண்டதில்லையா? கடவுள் மேல் நம்பிக்கை வைப்பதைத் தவிர மனிதனுக்கு வேறு ஒரு மார்க்கம் உண்டா?"

இன்னும் பல கூறி அப்பா என்னைத் தேற்றினார். நானும் மனதைத் துயரத்திலிருந்து மீட்டு கோயில் சென்றேன். கோயிலில் ஏதேதோ கதைகளுக்கு மத்தியில் என் மனம் விரும்பாத அந்தக் கதையும் என் காதில் விழுந்தது. 'ஆறு வயது பெண்பிள்ளையின் கால்மேல் 'ஆமிட்ரக்' ஏறிவிட்டதாம்'. கோயிலுக்கு வந்து திரும்பிய வழியில் அப்படி நடந்துவிட்டது.

அப்பா கூறிய ஆலோசனைகள் கற்பூரமாகக் கரைய என் மனம் மீண்டும் ஆறாத கவலையில் மூழ்கியது.

மனிதன் தனக்குத்தானே சமாதானங்களை ஏற்படுத்திக் கொள்கின்றானா? அல்லது சம்பவங்கள் எல்லாம் ஒரு விதி முறையில் நடந்து கொண்டிருக்கின்றனவா?
***எது உண்மை?***

வி.என். சந்திரகாந்தி
மாகாணத் திறைசேரி

நன்றி – தினமுரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாழ்க்கை . . . . . . . . . .*

| | | |
|---|---|---|
| ஒரு சவால் | - | சமாளியுங்கள் |
| ஒரு வெகுமதி | - | ஏற்றுக் கொள்ளுங்கள் |
| ஒரு சோகம் | - | தாங்கிக் கொள்ளுங்கள் |
| ஒரு போராட்டம் | - | வென்று காட்டுங்கள் |
| ஒரு கடமை | - | நிறைவேற்றுங்கள் |
| ஒரு விளையாட்டு | - | ஈடுபடுங்கள் |
| ஒரு புதிர் | - | விடுவியுங்கள் |
| ஒரு சந்தர்ப்பம் | - | நழுவவிடாதீர்கள் |

**நன்றி - கலைச்செல்வி**

*அது என்ன..........*

**பசி வந்தால் பத்தும் பறக்கும்.**
**அந்தப் பத்தும் என்ன? இவைதான் அவை.**

1. மானம்
2. குலம்
3. கல்வி
4. வண்மை
5. அறிவுடைமை
6. தானம்
7. தவம்
8. உயர்ச்சி
9. தாளாண்மை
10. காமம்

அமரர் திருவாளர் ஸ்ரீரங்கன் அவர்கள் எவ்வகை குண இயல்பு கொண்ட மேலதிகாரியையும் தன் வசப்படுத்தி தனக்கு ஒப்படைக்கப்பட்ட கடமையை அவர்களின் திருப்திக்கேற்ப செவ்வனே நிறைவேற்றும் செயல்வீரன். அவரின் ஆத்மா சாந்தியடைவதாக.

**ஆ. செல்வத்துரை**
*கணக்காளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஆண்டுகள் அறுபது!

1. பிரபவ
2. விபவ
3. சுக்கில
4. பிரமோதூத
5. பிரசோற்பத்தி
6. ஆங்கிரச
7. ஸ்ரீமுக
8. பவ
9. யுவ
10. தாது
11. ஈசுர
12. வெகுதானிய
13. பிரமாதி
14. விக்கிரம
15. விஷு
16. சித்திரபானு
17. சுபானு
18. தாரண
19. பார்த்திய
20. விய
21. சர்வசித்து
22. சர்வதாரி
23. விரோதி
24. விகிர்து
25. கர
26. நந்தன
27. விஜய
28. ஜய
29. மன்மத
30. துர்முகி
31. ஏவிளம்பி
32. விளம்பி
33. விகாரி
34. சார்வரி
35. பிலவ
36. சுபகிருது
37. சோபகிருது
38. குரோதி
39. விசுவாசு
40. பராபவ
41. பிலவங்க
42. கீலக
43. சௌமிய
44. சாதாரண
45. விரோதிகிரு
46. பரிதாபி
47. பிரமாதீச
48. ஆனந்த
49. இராட்சத
50. நள
51. பிங்கள
52. காலயுக்தி
53. சித்தார்த்தி
54. ரௌத்திரி
55. துர்மதி
56. துந்துபி
57. ருத்திரோற்காரி
58. இரத்தாட்சி
59. குரோதன
60. அட்சய

*ஒரு நண்பனின் பார்வையில்*

செயலாளர்களின் பெருமதிப்பு
திணைக்களத் தலைவர்களின் பெருவிருப்பு
கணக்காளர்களின் உயிர் நட்பு
சக அலுவலரின் நல் உறவு
சிறு நாளில் பெரு வாழ்வு
அதுவே ஸ்ரீரங்கன் சிறப்பு

**இ. கிருஷ்ணானந்தன்**
*கணக்காளர்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனிக் கலைச் சொற்கள் சில

| | |
|---|---|
| Acoustic Coupler | கணிப்பொறியின் இலத்திரனியல் சாதனங்கள் செயற்பட உதவும் ஒரு அமைப்பு |
| Address | கணிப்பொறியின் நினைவறைகளில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட ஒரு இனத்தின் தகவல்கள் இருக்கும் இடம். |
| Baud Rate | தொடர்ச்சியான தகவல் பரிமாற்ற வேகத்தைக் குறிப்பது. ஒரு வினாடி நேரத்தில் நிகழும் செயல்களின் அடிப்படையில் இது கணிக்கப்படுகின்றது. |
| Bit | கணிப்பொறியில் சேமித்துவைக்கப்படும் மிகச்சிறிய தகவலான பைனரியுனிற்றின் சுருங்கிய வடிவம். |
| Bubble Memory | புதிய வகையில் கணிப்பொறி நினைவகம் இதில் தகவல்களைச் சேமிக்க சிறிய காந்தத் தகடுகள் பயன்படுத்தப்படுகின்றன. |
| Buffer | கணிப்பொறியில் தகவல்களை மேலும் செய்மைப்படுத்துவதற்கு முன் அவற்றைச் சேகரித்துவைக்கும் பகுதி. |
| Bug | கணிப்பொறியில் ஒரு செயல் திட்டத்தில் நிகழும் தவறு |
| Byte | தொடர்ச்சியான உட்டு பிற் கொண்ட பைனரி எண். |
| C.P.U (Central Processing Unit) | கணிப்பொறியை செயற்படுத்தும் மைய செயல்முறை அமைப்பு. |
| Cathode Ray Tube Terminal | கணிப்பொறியின் உள்ளே அதன் மையப் பகுதியில் அமைந்துள்ள ஒரு சாதனம். தகவல்களை திரையில் வெளிப்படுத்துவதற்கு இது பயன்படுகின்றது. |
| Chip | நுணுக்கமான தகவல்களும் சுற்று இணைப்புக்களும் கொண்ட அமைப்பு. |
| Chromometer | காலத்தை அளக்கும் மிக நுட்பமான கருவி |
| Clinical Thermometer | மனித உடல் வெப்பத்தை அளக்க உதவும் கருவி. |
| Cobol | கணிப்பொறி மொழி |
| Colorimeter | வண்ணங்களின் திறத்தை ஒப்புநோக்க உதவுவது |
| Compiler | உயர்நிலைமொழியை இயந்திர மொழிக்கு மாற்றும் ஆணைத்தொடர். |
| Computer | கணிப்பொறி (கணனி) |
| Cursor | கணனித்திரையில் காட்டப்படும் ஒரு அடையாளக்குறி. |
| Density | சுழல்தட்டின் ஒரு பாதையில் ஒரு பிரிவில் சேமித்துவைக்கப்படும் தகவல்களின் அளவு |
| Disk | தகவல்களும் செயல் திட்டங்களும் சேமித்து வைக்கப்படும் ஒரு சுழல் தட்டு. |
| Disk Drive | சுழல்தட்டுக்களில் தகவல்களைச் சேமிக்க அல்லது வாசிக்க உதவும் ஒரு இயந்திர அமைப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Documentation | கணிப்பொறியில் ஒரு தகவலை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பது குறித்த நெறிமுறைகள். |
| Error Message | கணிப்பொறியைப் பயன்படுத்துபவர் அதில் ஏதேனும் தவறுகள் செய்தால் அதைக் கணிப்பொறி திரையில் உறுதிக்காட்டும் வாசகம். |
| Format | சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்களின் வரிசையமைப்பு. சுழல்தட்டுக்களில் காந்தப்புலத்தை ஒழுங்குபடுத்தும் முறைமை. |
| Hardware | கணிப்பொறியின் இயந்திர அமைப்பு. |
| Hyper Card | அப்பிள் நிறுவனத்தில் மெக்கின்டோஸ் எனும் பிரபலமான கணிப்பொறிக்காக ஏற்படுத்தப்பட்ட ஆணைத்தொடர். |
| I.C. | சிலிக்கன் சில்லு |
| Image Processing | ஒரு படத்தை பைனரி இலக்க வடிவில் மாற்றி அதை கணிப்பொறி மூலம் ஆராயும் துறை |
| Index Register | மைக்ரோ புரோசஸ்சர் எனும் நினைவகம் |
| Input | கணிப்பொறியின் உள்ளே செலுத்தப்படும் அனைத்துவகைத் தரவுகளும் |
| Integer | பின்னமில்லாத முழு எண்கள் |
| Interface | கணிப்பொறிக்கும் பிற சாதனங்களுக்கும் இடையேயுள்ள இணைப்பு |
| Interrupt | கணிப்பொறி ஒரு செயலைச் செய்துகொண்டிருக்கும் போது அதை அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு மற்றொரு செயலைச் செய்யுமாறு பணிக்கும் வசதி |
| Key | கணிப்பொறியின் முக்கிய தகவல்களை அணுக தேவைப்படும் சாவி போன்ற அமைப்பு. |
| Kilo | கணிப்பொறியியலில் ஒரு கிலோ என்பது 1024 ஆகும். |
| L.C.D Liquid Cristal Display | கணிப்பொறியின் திரை - சிறிய கணிப்பொறியில் இது பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. |
| Label | ஆணைத்தொடரில் ஒரு குறிப்பிட்ட ஆணையை அடையாளம் காண்பதற்காக இணைக்கப்படும் அடையாளம். |
| LAN ( Local Area Network) | ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் உள்ள கணிப்பொறிகள் அனைத்தையும் இணைத்து செய்யப்படும் வலைப்பின்னல் அமைப்பு. |
| Light Pen | கணிப்பொறித் திரையில் தேவைப்படுபவனவற்றை தேர்வு செய்ய பயன்படும் கருவி |
| Load | தகவல்களையும் தரவுகளையும் கணிப்பொறியின் உள்ளே செலுத்துவதைக் குறிக்கும். |
| Loader | ஒரு நீண்ட ஆணைத்தொடரை கணிப்பொறிக்குள் செலுத்த பயன்படும் மற்றுமொரு சிறிய ஆணைத்தொடர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Log On | மெயின்ப்ரேம் உட்படும் மிகப்பெரிய கணிப்பொறியை பயன்படுத்துவதற்கு முன் உள்ள சில நுழைவு முறைகள் |
| Loop | ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிறைவேறும் வரை கணிப்பொறியை வேறொரு பணியைச் செய்யுமாறு பணிப்பது. |
| M.I.S | ஒரு நிறுவனத்தின் நிர்வாக அமைப்பிற்கு தேவையான அனைத்துத் தகவல்களையும் பெற உதவும் அமைப்பு. |
| Macro | பல ஆணைத்தொகளைக் கொண்ட ஒற்றை ஆணை |
| Main Frame | பிரதான கணிப்பொறிகளை குறிப்பிடும் |
| Memory | தகவல்களைச் சேமித்து வைக்கும் உள்ளமைப்பு. |
| Menu | கணிப்பொறி தான் பெற்றுள்ள வசதிகளை திரையில் காட்டும் அமைப்பு |
| Micro Programming | ஒரு கணிப்பொறி செய்ய வேண்டிய பணிகளுக்குரிய ஆணைகளை அக்கணிப்பொறி உருவாக்கப்படும் போதே நிறுவுவது. |
| Modula | கணிப்பொறியில் பயன்படுத்தப்படும் ஒரு மேல்நிலை மொழி. |
| Multi Access | கணிப்பொறி ஆணைத் தொடரையும் அதற்கான தகவல்களையும் தேவைப்படுவோர் அணுகும்படி செய்யும் வசதி. |
| Network | கணிப்பொறிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து அவற்றின் வசதிகளை பகிர்ந்துகொள்ளுமாறு செய்யும் முறை. - வலைப்பின்னல் முறை |
| Noice | தகவல்களை பலவீனப்படுத்தும்இடையூறுகள். |
| Object Code | கணிப்பொறிக்கான தனியான மொழி |
| Operating System | கணிப்பொறியின் அனைத்துப் பாகங்களையும் செயற்படுத்தும் ஆணைத்தொடர்களால் ஆன தொகுப்பு. |
| Optical Disk | கணிப்பொறி தகவல்களை உமுத பயன்படும் ஒரு காந்தத் தகடு |
| Optical Fibre | செய்தித் தொடர்பிற்காக கண்ணாடிக் குழல்களுக்குள் செலுத்தப்பட்ட ஒளி அலைகள். |
| P.C (Personal Computer) | மேசைக்கணிப்பொறி |
| Pixel | கணிப்பொறித் திரையில் தோன்றும் மிகச்சிறிய புள்ளி. |
| Printer | கணிப்பொறியில் இருந்து வெளியாகும் தகவல்களை அச்சடிக்கும் இயந்திரம். |
| Processor | நிரற்படுத்தும் அமைப்பு |
| Prolog | கணிப்பொறி மொழிகளுள் ஒன்று - தர்க்கரீதியான கூற்றுக்களுக்கு பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. |
| Prompt | கணிப்பொறியைப் பயன்படுத்துபவருக்கு கணிப்பொறி தெரிவிக்கும் சில நினைவூட்டல் செய்திகள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Quick Sort | நினைவறைகளில் உள்ள தகவல்களை வரிசைப்படுத்துவதற்காக வழங்கப்படும் கட்டளை |
| R.S.A encryption | கணிப்பொறியில் செய்திகளை அனுப்பும் போது பிறர் அதனை இடைமறித்து அறிந்து கொள்ளாவண்ணம் அனுப்பும் முறை |
| Spectrometer | ஒளிவிலகல் எண்களை மிக நுட்பமாக அளவிட உதவுவது. |
| While Loop | கணிப்பொறியில் திரும்பத் திரும்ப செய்ய வேண்டிய பல செயல்களைக் குறிக்கும். |
| Word Processor | கடிதம் கட்டுரை போன்றவற்றை தயாரிப்பதற்கு பயன்படும் ஆணைத்தொடர். |

***செயற்கருவிகள்***

| | |
|---|---|
| Altimeter | குத்துயரங்களை அளக்க உதவும் திரவமில்லாக் கருவி. |
| Ammeter | மின்னோட்டத்தின் வலிமையை அளக்க உதவுகின்றது. |
| Anemometer | காற்றின் வேகம் , திசையை அறிய உதவுவது. |
| Audiometer | கேள்வித்திறனை அளக்க உதவுவது |
| Barometer | வளிமண்டல அமுக்கத்தை அளக்க உதவுகிறது. |
| Binoculars | தொலைதூரப்பொருட்களைக் காண உதவுவது. |
| Calorimeter | வெம்மை அளவி |
| Commutator | மின்னோட்டத் திசையை மாற்ற உதவுவது. |
| Dynamo | இயந்திர ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றும் பொறி |
| Dynamometer | மின்திறனை அளக்க உதவுவது |
| Electroscope | வெப்பநிலையை அளக்க உதவுவது |
| Galvanameter | மின்னோட்டத்தை மிக நுண்மையாக அளக்க உதவும் கருவி |
| Hydrometer | நீர்மங்களின் ஒப்பு அடர்த்தியை அளக்க உதவவது. |
| Hydrometer | ஈரப்பத அளவி |
| Hydrophone | நீருக்கடியில் பேசும் குரலைக் கேட்க உதவுவது |
| Hygroscope | ஈரப்பத அளவு மாற்றங்களை காண உதவும் கருவி |
| Lactometer | பாலின் ஒப்பு அடர்த்தியைக் காண உதவுவது |
| Manometer | வளிமண்டலங்களின் அமுக்கத்தை அளக்க உதவுவது. |
| Mariner's Compass | மாலுமி திசைகாட்டி |
| Micrometer | சிறு தொலைவுகளை, கோணங்களை துல்லியமாக அளக்க உதவுவது. |
| Microscope | முன்காட்டி |
| Periscope | காண்பவர் கண்மட்டத்திற்கு மேல் இருக்கும் பொருட்களை காண உதவுவது. |
| Photometer | ஒளிர் பொருட்களின் பொலிவுத் தீவிரத்தை ஒப்புநோக்க உதவும் அமைப்பு. |
| Plantimeter | சமதளப் பரப்பை தொகுத்தளிக்க உதவும் கருவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Pyknometer | நிர்மத்தின் அர்த்தியையும் விரிவையும் அளக்க உதவும் கருவி. |
| Pyrheliometer | சூரியக் கதிரின் வீச்சுக்களை அளக்க உதவுவது. |
| Pyrometer | உயர்வெப்பநிலையை அளக்க உதவும் கருவி |
| Quadrant | அயன அமைப்பிலும் வானவியலிலும் குத்துயரங்களையும், கோணங்களையும் அளப்பது. |
| Quartz clock | வானியல் ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் மிகத் துல்லிய கடிகாரம். |
| Radio Micrometer | வெப்பக்கதிர் வீச்சுக்களை அளப்பது. |
| Rain gauge | மழை அளவி |
| Refractometer | ஒளிவிலகல் எண்ணை அளக்க உதவுவது. |
| Salinometer | உப்புககரைசல் அளவி |
| Seismograph | பூகம்ப அளவி |
| Sextant | இரு பொருட்களுக்கு இடையேயான கோணத்தொலைவுகளை அளப்பது |
| Spectroscope | மின்காந்த அலைவரிசையை பிரித்துக் காட்டுவது |
| Spherometer | கோளக வடிவப் பொருட்களின் வளைவினை துல்லியமாக அளக்க உதவும் கருவி. |
| Spring balance | சுருள் தராசு |
| Spygmomanometer | இரத்த அழுத்த அளவி |
| Stereoscope | பொருள் ஆழத்தையும் திடத்தன்மையையும் இருபரிமாணப் படமாகக் காட்டுவது. |
| Stethoscope | இதயத்துடிப்பை அளக்க உதவும் கருவி |
| Stroboscope | குறிப்பிட்ட கால அளவில் விரைந்து இயற்கும் பொருட்கின்ன அதிவேகச் சலனத்தை நோக்கும் கருவி. |
| Tangent galvanometer | நேர்மின்னோட்ட வலிமையை அளக்க உதவுவது. |
| Telemeter | வெகு தொலைவில் நடக்கும் நிகழ்ச்சிகளை பதிவு செய்யும் கருவி |
| Teleprinter | தொலை இடங்களுக்கு தகவல்களை அச்செழுத உதவும் கருவி |
| Telescope | தொலைகாட்டி |
| Television | தொலைக்காட்சிப் பெட்டி |
| Thermometer | வெப்பநிலைஅளவி |
| Thermoscope | வெப்பத்தால் ஒரு பொருளின் பருமனில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் வெப்ப வேறுபாட்டை தோராயமாக அளக்க உதவுவது. |
| Thermostat | வெப்பநிலைப்படுத்தி |
| Vernier | அளவுகோலின் மிகக் குறைந்த அலகின் உட்பகுதிகளை சுத்தமாக அளவிட உதவும் கருவி |
| Viscometer | பாகநிலையளவி |
| Voltmeter | மின்னழுத்த அளவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுக்கு ஒரு ஸ்ரீரங்கா

கணக்காளா! பெருமகனே!
இனிய நற்பண்பாளா
இதயம் எல்லாம் வேகுதடா.

கன்ன உச்சி வகிடெடுத்து
கட்டழகுச் சிரிப்பு உதிர்த்து
உன்னைப் போல் சேவை செய்ய
உனக்கு நிகர் நீயேதான்.

உன் நடையில் புல்நிமிரும்
உன் சிரிப்பில் மனம் மகிழும்
உன் சேவை உலகுணரும்
உன் மனது துயர் களையும்.

என்று நீ கோபித்தாய்
எவர் உன்னை வெறுத்தார்கள்
எல்லோர்க்கும் இனியவனாய்
எப்போதும் உலா வந்தாய்
இன்முகத்து மனையாளும்
இனிய உன் பிள்ளைகளும்
துன்புற்று துடிக்க வைத்து
துயின்றபடியே கண்மூடி.

நட்புக்கு இலக்கணம் நீ
நண்பனுக்கு புகலிடம் நீ
எத்திக்கும் நீ நிறைந்து
இருக்கின்றாய், எம்விழிகள்
கண்ணீர் மழை பொழிய
கலங்க விட்டுப் போனாயேன்?
உன்னை இழந்து துடிக்கின்ற
நண்பர்கள் கண்ணீரால்
அஞ்சலிக்கின்றோம். . . . .

*— தாமரைத்தீவான் —*

நாளும் சந்தித்தோம், நலம் விசாரித்தோம்
நீளும் உறவுகள் என, நாம் நினைத்திருந்தோம்
நீர் மேல் கல்லென்ற நியதியானதேனோ...........

**கே.பி. சிங்காரம்**
கணக்காளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இதயங்களுடனேயே
ஒன்றிப்போன எம்
இனிய நண்பா

எம்மோடு பேசித்திரிந்த
கூடித்திரிந்த
அந்தக் கணங்களை
நினைக்கையில்
ஐயகோ ..............!
அந்த நினைவுகள் சுமந்த
எம்மிதயங்களனைத்தும்
நெருப்பைச் சுமக்கின்றன

உன் நினைத்திரா மரணம்
எம் நெஞ்சை நெருடுகையில்
எம் மூச்சுக் குழலுக்குள்
புயலொன்று நுழைகிறது

நண்ப !
இப்படியாய் துன்பங்களைச்
சுமந்தபடி இங்கே

**ஜே. ஆர். புவிராஜ்**
*கணக்காளர்*

"இச்சுவை தவிர யான் போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்க மாநகருளானே"

அரங்கமா நகருள் கண்ட ஸ்ரீரங்கா,
வாழ்விழந்து நின்ற வடக்கு கிழக்கு மக்களுக்கு
புனர்வாழ்வும், புனரமைப்பும் செய்யும் கணக்கை ஆண்டு
கணக்காளன் ஆனாய்.
ஆனால் உன்னைப்பற்றி நாங்கள் போட்ட கணக்கை
எல்லாம் தப்புக்கணக்காக்கி விட்டாயே.
சொர்க்கத்தின் வீதிதான் ஒடுக்கமென்பார்,
நீ சென்ற நகரத்தின் வீதி எவ்வாறு இப்படி ஒடுங்கியது?
உனக்கு மட்டுமா இது இல்லை இவ்வாறு
நடுவீதியில் ஒடுங்கியோர் உனக்கு முன்னும் பலருளரோ?
மரணங்கள் மலிந்த எம் மண்ணில்,
பிணி, மூப்பு, சாக்காட்டைப் போதப் பொருளாக்கிய
போதிசத்துவர் பாதையிலே நாமும் போவதாக இருந்தால்
நடுவழியெங்கும் யமன் வருவானோ?

*எழுதுவினைஞர், அதனோடிணைந்த*
*சேவைகள் சங்கம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்காளர் சேவை தன்னில்
கண்ணாக திகழ்ந்த எங்கள்
குணக் குன்றாம் ஸ்ரீ ரங்கன்
குறிக்கோளை எய்துதற்காய்
கணனிதனை நன்றாக
கற்பதற்கு செல்கையிலே
கணப் பொழுதில் காலனவன்
கவர்ந்த தென்ன
கொடுமையையா?

சேவை தனை உயிர் மூச்சாய்
செயல் வீரன் கொண்டிருந்தான்
சேவைக்காய் தன்னுயிரைச்
செயல் வீரன் அர்ப்பணித்தான்
சேவை தனை கண்ணிலுள்ள
பார்வையெனக் கருதி நின்ற
சேவையாளன் பிரிவினை நாம்
சகிப்ப தென்பதெவ்வாறு?

பண்பாலே பகைவர்களை
நண்பர்களாய் மாற்றுவித்து
நண்பர்கள் தமையென்றும்
நன்றாக அரவணைத்த
பண்பாளன் துணைவியையும்
பாலகர்கள் மூவரையும்
கண்ணீர் கடலினின்றும்
கரையேற்று இறையோனே . . . .

**ரவி மட்டக்களப்பு**

அன்பான நண்பன் அவன்
அன்று அவதியாய்ச் சொல்லிச் சென்றான்
இன்னுமோ வந்தானில்லை
என்று நீ வருவாய் என்று
ஏங்கியே நின்றேன் இங்கு
ரங்கா தங்கியே விட்டாய் அங்கு
வந்து நீ போனால் நன்று

**பெ. சிவகுருநாதன்,**
*கணக்காளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணணி

கணணி (Computer) தோன்றி அமார் ஐம்பது ஆண்டுகள்தான் ஆயின என்றாலும், அதன் பயன்பாடு இன்று எல்லாத் துறைகளிலும் அதிவேகத்தில் அதிகரித்து வருகிறது. கணணியின் துல்லியமும், வேகமும் குறைவான விலையுமே இதற்குக் காரணங்கள்.

*கணணியின் முன்னோடிகள்*

பாஸ்கல், பாபேஜ் (Babbage), லைப்னிஸ் (Leibniz) போன்றோர் பல்சக்கரங்களால் இயங்கும் கணிப்பு இயந்திரங்களை உருவாக்கினர். கட்டளை நிரல்களை கொண்டு (Computer Program) இயங்கவல்ல ஒரு பல்சக்கர பொறியினை (Analytical Engine) பாபேஜ் வடிவமைத்தார். இதனாலேயே பாபேஜ் கணணியின் தந்தை எனப்படுகிறார். இந்தக் கணணிக்கு கட்டளை நிரல்கள் எழுதிய ஏடா லவ்லேஸ் (பைரனின் மகள்), முதல் நிரலர் (First Programmer) என போற்றப்படுகிறார். அட்டைகளில் துளையிட்டு, அதன் மூலம் தகவல்களை அலசி ஆராயலாம்என்று கண்டுபிடித்தவர் ஹொலரித் (Hollerith). மின்சாரத்தினால் இயங்கி, எலக்ட்ரோ மெகானிக்கல்ரிலேக்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கணணிகள் அடுத்து வந்தன.

*முதல் கணணி*

நகரும் பாகங்களை விட்டுவிட்டு, வேக்குவம் டியூப்புகள் பயன்படுத்திவடிவமைக்கப்பட்ட முதல் பெரிய மின்னணுக் கணணி ENIAC (Electronic Numercial Integrator and Calculator) 1946 ஆம் ஆண்டு பென்ஷ்ல்யால் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே இன்றைய கணணிகளின் முதல் கணணி. இது பைனரி (Binary) எண்களைக் கொண்டு வேலை செய்தது. தொடக்க காலத்தில் கணணிக்குள் தகவல்கள் மட்டுமே வைக்கப்பட்டன. அதன்பின் கட்டளைகள் ஒன்றன் பின் ஒன்றாக உட்செலுத்தப்பட்டு, அதற்கான செயல்பாடுகள் உடனுக்குடன் செய்யப்படுத்தப்பட்டன. இதனால் நேரம் விரயமானது. இதைத் தவிர்க்க கட்டளைகளையும் கணணியின் நினைவகத்தில் வைத்து , இங்கிருந்து ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளலாம் என்று வான் நாய்மன் (Von Neumann) தெரிவித்தார். இன்றைய கணணிகள் அனைத்துமே இவ்விதத்தில்தான் செயல்படுகின்றன. இந்தக்கருத்தை செயற்படுத்திய முதல் கணணிகள் EDVAC (Electronic Discrete Variable Automatic Computer - 1952), EDSAC (Electronic Delay Storage Automatic Calculator - 1949). இவை அனைத்துமே முதல் தலைமுறை கணணிகள்.

வால்வுகள் போல் வேலைசெய்யும் டிரான்ஸ்ஸிஸ்டர்களை (Transistors) கொண்டு உருவாக்கப்பட்ட கணணிகள் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவை. டிரான்ஸ்ஸிஸ்டர்களின் உருவம் சிறியதாக இருந்ததால், கணணியின் உருவமும் சிறியதாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிரான்ஸ்ஸிஸ்டர் போன்ற பல பாகங்களை உள்ளடக்கி ஒருங்கமை சுற்றுச் சில்லுகள் (Integrated Circuit Chips) தோன்றின. இவை LSI (Large Scale Integration), VLSI (Very Large Scale Integration) என வளர்ச்சி பெற்றன. மூன்று மற்றும் நான்காம் தலைமுறைக் கணனிகள் முறையே LSI, VLSI சில்லுகளைப் பயன்படுத்தின.

*ஐந்தாம் தலைமுறை*

பல்லாயிரக்கணக்கான கூட்டல், பெருக்கல் போன்றவற்றைச் சில நொடிகளில் செலாக்கும் திறன் கணனிக்கு உண்டு. இதில் வேகம் உண்டே தவிர அறிவுத்திறன் (Intelligence) கிடையாது. செயற்கை அறிவுத்திறன் (Artificial Intelligence) கொண்ட ஐந்தாம் தலைமுறைக் கணனிகள் உருவாக இன்னும் பல ஆண்டுகள் ஆகலாம்.

***கணனியின் வகைகள்***

செயல்திறனைக் கருத்தில் கொண்டு கணனிகள் உயர் (Super), முதன்மை (Mainframe) சிறு (Mini), பணிநிலையப் (Work Station) நுண் (Micro) என்று பலவாக வகைப்படுத்தப்படுகின்றன.

***உயர் வகை:*** விமான வடிவமைப்பு, பருவநிலை முன்கணிப்பு, அணுப்பிளவு சோதனை போன்ற இடங்களில் செய்ய வேண்டிய கணிப்பின் அளவு, அதாவது +, -, X போன்ற செயல்பாடுகளின் எண்ணிக்கை பல கோடிகளில் இருக்கும். இவற்றை குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்க உதவுபவையே உயர் கணனிகள். இவற்றின் கட்டமைப்பு (Architecture) மற்றவற்றிலிருந்து மாறுபட்டிருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட பல மையச் செயலகங்கள் (CPU – Central Processing Unit) ஒன்றிணைந்து வேலை செய்யும். இந்தச் செயலகங்களை இணைக்கும் முறை (எல்லாவற்றையும் எல்லாவற்றுடனும் நேரடியாக இணைக்க முடியாது), அவற்றிற்கிடையே நடக்கும் செய்திப் பரிமாற்றம், அவற்றின் திறன் போன்றவை உயர் கணனியின் முக்கிய அம்சங்கள். கிரே(Cray), கனெக்ஷன் மெஷின் (Connection Machine) என்பவை அமெரிக்காவில் உருவான உயர் கணனிகள். இந்தியாவில் தயாராவது பரம் (Param). இவை தரத்திலும், விலையிலும் மிக உயர்ந்ததாக இருந்தாலும், தற்போது அளவில் சிறியதாக ஓர் அறைக்குள் அடங்குவதாக இருக்கின்றன.

***முதன்மை வகை:*** துவக்ககாலத்தில் தோன்றியவை. பெரிய அளவில் இருந்தன. சான்று IBM 370. அப்போது துளை இட்டைகள் பயன்படுத்தப்பட்டன. துளை அட்டைகள் மூலம் உள்ளீடு (Input) செய்வது, அச்சிட்டு வெளியீடு (Output) செய்வது; கணிக்கும் போதே செய்ய, சிறு உதவிக் கணனிகளும் இந்த அமைப்பில் இருக்கும். இவை கணிப்பு மையம் (computer Centre) என்ற ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்டதில் இருக்கும். நிரலர் (Programmer) கணணியுடன் சேரடித் தொடர்பு கொள்வதில்லை.

இன்றைய முதன்மைக் கணணிகள் சற்று மாறுபட்டவை. துளை அட்டைகள் பயன்பாட்டில் இல்லை. பலரும் நேரடியாகத் தொடர்பு கொள்ள சில நூறுவரை முனையங்கள் (Terminal) கணணியில் இணைந்திருக்கும் மற்ற கணணிகள் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம். இம்மாதிரிக் கணணிகள் வேலைப்பளு அதிகமிருக்கும் இடங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் மட்டுமே காணப்படும். இவற்றின் விலை அதிகம் என்பது இதற்கு ஒரு காரணம்.

*சிறுவகை:* முதன்மை வகைபோல் திறன் அதிகமில்லாவிட்டாலும், விலை குறைவாக இருக்கவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டவை. PDP 11 என்பது இவ்வகையில் புகழ்பெற்றது. சில முனையங்கள் மூலம் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் முறையில் அமைந்தது. பணிநிலையங்கள் பிரபலமானதும் சிறு கணணிகளின் தேவை குறைந்துள்ளது.

*பணிநிலையம்:* நுண்வகையில் தோற்றத்தில் சற்று மாறுபட்டு வருபவை நோட்டு புத்தக (Note Book) வகை, மடி (Lap top) வகை, உள்ளங்கை (Palmtop) வகை. நுண்வகையில்வேகம் மற்றும் நினைவகம் சற்று அதிகமாகவும், திரையில் படங்கள் வரையும் திறன் கூடியதாகவும், ஒருவர் உட்கார்ந்து வேலை செய்வதாகவும் இருக்கும்படி வடிவமைக்கப்பட்ட கணணிகள் பணிநிலையம் எனப்படும்.

*நுண்வகை :* கணணியின் மூளையான சி.பி.யூ. (CPU) ஒரே சில்லில் இடம்பெற்ற வகை இது. மைக்ரோ கணணி, மேஜைக் கணணி (Table top), சொந்தக் கணணி ( Personal Computer) என்று பலவாக அழைக்கப்படுகிறது. பலரும் வாங்கிப் பயன்படுத்தும் விதத்தில் விலை குறைந்தது. இன்று இலங்கையில் பல்வேறு நிறுவனங்களிலும், வீடுகளிலும் காணப்படுவது இதுவே.

*இலக்கவகையும், ஒப்புமைவகையும் (Digital and Analog Computers)*: இன்றைக்கு பிரபலமாக உள்ள கணணிகள் அனைத்தும் இலக்கவகையைச் சேர்ந்தவை. கணணிகள் 0, 1என்ற இரண்டு குறியீடுகளின் மூலமே அனைத்துக் கணிப்புக்களையும் செய்கிறது. இந்த இரண்டு நிலைகளைத் தவிர இடைப்பட்ட நிலைகள் எதுவுமில்லை.

ஒப்புமை வகையில் ஒரு மாறியின் (Variable) மதிப்பு தொடர்ச்சியாக (இடைவெளியில்லாமல்) மாற முடியும். இதில் குறிப்பிட்ட கணக்கிற்குத் தகுந்தாற்போல் கணணியின் இணைப்புகளை மாற்றி அமைக்க வேண்டும். மட்டுமல்லாது எதையும் மிகத் துல்லியமாக அளப்பது கடினம் என்பதால் இவ்வகையின் முடிவுகளும் துல்லியம் எனக் கூற இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *தகவல் தொடர்பின் நெடும் பெரும் தடம் (Information Super Highway)*

தகவல் தொடர்பிலும் ஒரு நெடுஞ்சாலையில் செல்லும் வாகனங்களைப் போலவே, பல்வேறு வடிவிலான தகவல்கள் வேறுவேறு வேகத்தில் பயணம் செய்து கொண்டிருக்கின்றன. இன்று தகவல் பரிமாற்றம் பேச்சுவடிவோடு நின்றுவிடவில்லை. நவீன தகவல் தொடர்பு கொம்பியூட்டர் மயமாகிவிட்டது. சிலந்தியின் வலைப் பின்னலைப்போல் கொம்ப்யூட்டர் நெட்வோர்க் (Network) பரவிக்கிடக்கிறது. உலகளாவிய தகவல் தொடர்புக் கட்டமைப்பில் கொம்பியூட்டரின் துணைகொண்டு எழுத்து (Text), ஒலி (Sound), வரைகலை (Graphics), நகரும் படங்கள் (Animation), ஒளிப்படம் (Video) எனப்பல்வேறு வடிவங்களில் தகவல் பரிமாற்றம் நடைபெற்று வருகின்றது. இன்டர்நெட் (Internet) என்னும் சர்வதேச கொம்பியூட்டர் நெட்வோர்க் இத்தகைய மல்ட்டி மீடியாத் (Multi Media) தகவல்தொடர்புக்கு ஒரு அகன்ற பாதையை திறந்து விட்டிருக்கின்றது.

தகவல்தொடர்பு, மின்னணு டிஜிட்டல் மயமாகி விட்ட அதேவேளையில், தகவல்தொடர்புக்கான ஊடகமும் நவீனப்பட்டுள்ளது. கடலடிஒளி இழைக்கேபிள்கள் மூலமாகவும் செயற்கைக் கோள்கள் மூலமாகவும் உலகின் அனைத்துக் கண்டங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இரவு பகல் எந்நேரமும் எழுத்து, ஒலி, படம் வடிவிலான தகவல்கள் பல்வேறு திசைகளிலும் முட்டிமோதிக் கொள்ளாமல் பயணம் செய்துகொண்டிருக்கின்றன. இவ்வாறு பல்வேறு வடிவிலான தகவல் பரிமாற்றம் நடைபெறும் நீண்ட நெடும் தகவல் பெரும்தடம் இன்ஃபோபான் (Info Bhan); இன்போ ஹைவே (Info Highway); இன்ஃபர்மேஷன் சூப்பர் ஹைவே (Information Super Highway) போலும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. தகவல் தொடர்பின் ஆச்சரியப் புதுமைகளுள் இதுவும் ஒன்று.

### *இன்டர்நெட் தொலைபேசி*

இன்டர்நெட் மூலமாக கம்பியூட்டர்களை இணைத்துக் கொண்டபின் ஒரு சாப்ட்வேர் உதவியுடன் கம்பியூட்டருக்குப்பதில் தொலைபேசி மூலம் பேச முடிவது. ஏற்கனவே இதற்குரிய ஹார்ட்வேர், சாப்ட்வேர் சந்தைக்கு வந்துவிட்டன. மைக்ரோ பிராசசர் தயாரிப்பில் உலகிலேயே முன்னணி இடம் வகிக்கும் இன்டெல் நிறுவனம் இன்டர்நெட் ஃபோன்(Internet phone) என்னும் சாப்ஃட்வேர் தொகுப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்போது இன்டர்நெட் தொடர்பினை தொலை பேசி உரையாடலுக்கு பயன் படுத்துவோர் ஒரே மாதிரியான தகவல் தொடர்பு சாஃப்ட்வேர் தொகுப்பினை வைதிருக்க வேண்டும். இன்டெல் இன்டர்நெட் ஃபோன் சாஃப்ட்வேர் இந்நிலையை மாற்றிவிடும் இந்த சாஃப்ட்வேர் தொகுப்பினை இன்டர்நெட்டில் http/www.Intel.com/iaweb/cpc என்ற முகவரியிலிருந்து இலவசமாக உங்கள் கொம்பியூட்டரில் பதிவு (Download) செய்துகொள்ளலாம் என அறிவித்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *மல்ட்டி மீடியா ( Multi Media )*

ஒரே சாதனத்தின் மூலம் பேசுவது எழுத்து வடிவிலான தகவல்பரிமாற்றம், பார்ப்பது என்று அத்தனை வடிவங்களிலும் செய்திப்பரிமாற்றத்தை இக்காலக் கொம்பியூட்டர் சாத்தியமாக்கியுள்ளது. அது தான் மல்ட்டி மீடியா *(Multi Media Computer)*. ஒரு மல்ட்டி மீடியா கொம்பியூட்டரில்.

1. எழுத்து (Text)
2. ஒலி (sound)
3. வரைகலை (Graphics)
4. உயிரோட்ட வரைபடங்கள் (Animation)
5. ஒளிக்காட்சிப் படங்கள் (Video Pictures)

ஆகிய ஐந்து வடிவிலான தகவல்களைப் பெறமுடியும்
ஒரு சாதாரண கொம்பியூட்டரில் சிடிரோம்டிரைவ் (CD Rom Drive) சவுண்ட்கார்ட் (Sound Card) ஒலி பெருக்கிகள் (Speakers) ஒலிவாங்கி (Micro Phones), வின்டோஸ் போன்ற ஆபரேட்டிங் சிஸ்டம் ஆகியவை இணைக்கப்பட்டால் அது மல்ட்டி மீடியா கொம்பியூட்டராகிவிடும். உலகத் தகவல் களஞ்சியத்தை உங்கள் கொம்பியூட்டர் திரையில் படித்தறியலாம். நேருவும் காந்தியும் மேடையில் முழங்கியதை கொம்பியூட்டரில் இணைக்கப்பட்ட ஒலி பெருக்கியில் கேட்டுமகிழலாம். ஏ.ஆர். ரகுமானின் *உயிரே* படப் பாடலை கேட்டு ரசிக்கலாம். உலகின் சிறந்த திரைப்படங்களின் *(Titanic)*காட்சிகளை உட்கார்ந்த இடத்திலிருந்தே கண்டுகளிக்கலாம்.

இத்தகைய மல்ட்டி மீடியாத் தகவல்களை தொலைதூரத்தில் உள்ள இன்னொரு கொம்பியூட்டருக்கு உலகளாவிய நெட்வேர்க் (Network) அமைப்பான இன்டர்நெட் (Internet) மூலம் தகவல்பரிமாற்றம் செய்ய முடியும்.

## *இ-மெயில்(E-Mail)*

தாள், மை இல்லாத ஒரு புரட்சி அஞ்சல் தொடர்பே மின்னணு அஞ்சல் (Electronic Mail) இதைச்சுருக்கமாக இ - மெயில் எனப்படுகிறது. தொலைபேசி தகவல் தொடர்பு டிஜிட்டல் மயமாகிவிட்ட நிலையில், தொலைத் தகவல் தொடர்பு கொம்பியூட்டர் மயமாகி விட்டதில் ஆச்சரியமில்லை. ஏற்கனவேயுள்ள தொலைபேசித் தொடர்பு கட்டமைப்பின் வழியாக, இரண்டு கொம்பியூட்டர்கள் தகவல் பரிமாற்றம் செய்து கொள்வது டேட்டா தகவல் தொடர்பு (Data Communication) டேட்டா தகவல் தொடர்பு பல் வடிவங்களில் நடைபெற முடியும்.

எழுத்துகளால் ஆன உரை (Text) வடிவில் அமைந்த தகவல் தொடர்பே இ-மெயில். ஆனாலும் உரையுடன் படம், ஒலி போன்றவற்றை இணைத்து அனுப்புவதையும் இ-மெயில் என்று கூறுவதும் வழக்கத்தில் உள்ளது. ∴பேக்ஸில் தகவல் அனுப்புவதையும் இ-மெயில் என்று சொல்லலாமா? ∴பேக்ஸில் அனுப்பப்படும் தகவலை மறு முனையில் விரும்பினால் எடிட் செய்ய முடியாது. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்ப்யூட்டர் வழியாக அனுப்பப்படும் தகவலை மறுமுனையில் விருப்பப்படி மாற்றியமைக்கலாம். இந்தக் காரணத்தால் ஃபேக்ஸ் தொடர்பை இ-மெயில் என்பதில்லை.

இ-மெயில் தகவல் பரிமாற்றம் நான்கு வகைகளில் நடைபெறுகிறது.

1. ஒரே அலுவலகத்தில் இயங்கும் லோக்கல் ஏரியா நெட்வொர்க் (LAN) அமைப்பில் அந்த அலுவலகத்தின் பல்வேறு பணிப்பிரிவுகளும் (Sections) கிளைக்கம்ப்யூட்டர் (Node) மூலம் ஒரு தலைமைக் கொம்ப்யூட்டருடன் (File Server) இணைக்கப்பட்டிருக்க, பணிப்பிரிவுகளுக்கிடையே தகவல் பரிமாற்றத்தை கொம்ப்யூட்டரே செய்வது.

2. ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊரிலுள்ள கொம்ப்யூட்டருடன் தொடர்பு கொண்டு கடிதத்தை அனுப்பி வைப்பது, இந்தப் பணிகளுக்கு ஒரு பி.சி. (P.C) தொலைபேசி, மோடம் தகவல் தொடர்பு, சாஃப்ட்வேர் (Software) ஆகியவை வேண்டும். இந்தப் பணிகளைச் செய்ய PACANY WHERE, Cross Talk, Pro COMM போன்ற சாஃப்ட்வேர் தொகுப்புக்கள் நடைமுறையில் உள்ளன.

3. இ-மெயில் தகவல்களை, டேட்டா தகவல் தொடர்பு சேவை வழங்கும் நிறுவனத்திடம் (E-MAil Service Providers) சேர்ப்பித்துவிட்டால் அவர்கள் அச்செய்தியை உரியவரிடம் சேர்ப்பித்து பின் நமக்கு தெரியப்படுத்துவது.

4. இன்டர்நெட் மூலமாக தொடர்பு கொண்டு கொம்ப்யூட்டர் மூலமாக தகவல் பரிமாற்றம் செய்து கொள்வது. இ-மெயில் வசதி இன்டர்நெட்டில் ஓர் அங்கம்.

தொலைபேசிக்கு எண் இருப்பது போல், இ-மெயில் தொடர்பு கொள்ளும் ஒவ்வொருவருக்கும் ஒரு இ-மெயில் முகவரி (E-Mail Address) உண்டு. தகவல் தொடர்பின் போது இந்த முகவரியை பயன்படுத்துதல் வேண்டும்.

## *வாய்ஸ் மெயில் (Voice Mail)*

இ-மெயில், தொலைபேசி உரையாடல் இவ்விரண்டு முறைகளின் சிறப்புத் தன்மைகளும் ஒருசேரப்பெற்றதே வாய்ஸ் மெயிலாகும் (Voice Mail). அதாவது, ஒருவர் தரவேண்டிய தகவலை தொலைபேசியில் தனது குரலிலேயே தெரியப்படுத்தலாம். மறுமுனையில் தகவலைப் பெறவேண்டியவர் இருக்கவேண்டிய அவசியமில்லை. தொலைபேசியில் தெரிவிக்கும் தகவல் மறுமுனையில் ஒரு கருவியில் பதிவாகிவிடும். அவர் வந்ததும் தனக்குரிய செய்திகள் ஒவ்வொன்றையும் டேப் ரிகார்டரில் (Tape Recorder) கேட்பது போல், அவரவர் குரலிலேயே அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ஸ் மெயில் தகவல் தொடர்பில் இரண்டு அங்கங்கள் உள்ளன.

1. நீங்கள் வீட்டில் இல்லாதபோது, உங்களுக்கு வரும் தொலைபேசி அழைப்புக்களுக்கு, ஏற்கனவே உங்கள் குரலில் முன்பதிவு செய்யப்பட்ட செய்திகளை அறிவிக்க முடியும். பதிவு செய்து வைக்கப்பட்ட செய்தியை உங்கள் தொலைபேசி எண்ணை அழைக்கும் அனைவருக்கும் ஒலிபரப்பும் பணி செய்ய முடியும்.

2. இத்தகைய செய்தியைக் கேட்டபிறகு, தொலைபேசியில் அழைத்தவர் தெரிவிக்கும் செய்தியை உங்கள் தொலைபேசியில் இணைக்கப்பட்ட கருவி பதிவுசெய்துகொள்ளும் நீங்கள் வீடுதிரும்பியபிறகு உங்களுக்கு வந்திருக்கும் செய்திகளை ஒவ்வொன்றாகக் கேட்கலாம்.

இப்போது ஒவ்வொரு வீட்டுத் தொலைபேசியிலும் இணைக்கத்தக்க வாய்ஸ் மெயில் கருவிகள் நடைமுறைக்கு வந்துள்ளன. பலமொழிகளில் இயங்கும் வாய்ஸ் மெயில் கருவிகளும் உள்ளன. நான்கு மொழிகளில் செயல்படும் வாய்ஸ் மெயில் கருவிகள் நடைமுறையில் உள்ளன.

*கணணி வரலாற்றில் சில பெரும் தலைகள்*

| பெயர் | கண்டுபிடிப்பு | ஆண்டு |
|---|---|---|
| பாஸ்கல் | பல் சக்கரக் கணிப்பான் | 1642 |
| பாபேஜ் | டிபரன்ஸ் என்ஜின், அனலிடிகல் என்ஜின் | 1792-1871 |
| ஹோலரித் | துளை அட்டை | 1890 |
| அடனாஸோஃப், பெர்ரி | முதல் மின்னணுக் கணணி, பைனரி எண்கள் | 1939 |
| ஐகென் | மார்க் - 1 | 1944 |
| மௌஷ்லி, எகெர்ட் | எனியாக் | 1946 |
| ஃபான் நாய்மன் | நினைவகத்தில் கட்டளை | 1949 |
| வாஸ்னியாக், ஸ்டீவ்ஸ் | ஆப்பிள்-நுண்கணணி | 1976 |
| பில் கேட்ஸ் | மைக்ரோ சாப்ட் நிறுவனம் | 1975 |

## itu]; (Virus)

இதுவும் ஒரு கட்டளை நிரல்தான். மற்ற நிரல்களில், தகவல் கோப்புகளில் அல்லது வட்டுகளின் முதல் பகுதியான பூட் செக்டரில் (Boot Sector) போய் அமர்ந்து கொள்ளும். இந்த நிரல்கள் அல்லது தட்டுக்களை கணணி பயன்படுத்தும்போது, அதனுடைய ஒரு பிரதியை கணணியிலிருக்கும் மற்ற நிரல்களில், வட்டுகளில் எழுதும். இதன்மூலம் வைரஸ் நிரல்கள் வெகுவிரைவில் பரவும். சில வைரஸ்கள் தீங்கு எதுவும் செய்யாமல், இந்தச் சொல்லை டைப் செய் என்பது போன்று சிறு தொந்தரவு செய்துவிட்டு நின்றுவிடும். ஆனால் மற்றவையோ கோப்புகள் பலவற்றை மாற்றிவிடும் அல்லது அடியோடு அழித்துவிடும். இதனால் பொருள் நஷ்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. வைரஸ்களை வர விடாமல் தடுப்பது, வந்தவற்றைக் கண்டுபிடித்து அழிப்பது போன்றவற்றைச் செய்ய ஆன்டி வைரஸ் (Anti Virus) மென்பொருட்கள் கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாய உலகம் Virtual Reality

இரண்டு கண்களுக்கும் அருகே உள்ள இரு சிறு திரைகளில் ஒரு புதிய உலகத்தையே காண்பிக்கின்றது கணனி. அந்த மாய உலகத்தில் நாம் நடந்து செல்லலாம் . திரும்(ப்)பி பார்க்கலாம். அதற்கு ஏற்றாற் போல் காட்சிகள் உடனுக்குடன் மாறுவதால் நாமேஅந்த உலகத்தில் இருப்பது போன்ற பிரமை நமக்கு ஏற்படும். மாய உலகத்தில் உள்ள பல பொருட்களுடன் உறவாடி அவற்றின் நிலையை மாற்றலாம். இந்த விதத்தில் விளையாடுவது (Virtual Games) மிகுந்த விறுவிறுப்புடையதாக இருக்கும் என்பதால், இந்த மாதிரியான விளையாட்டுக்கள் வர ஆரம்பித்துள்ளன.

இந்த யுக்தியை பயன்படுத்தி நாம் உண்மையில் செல்ல முடியாத இடங்களில் இருந்தும் பல செயற்பாடுகளைக் காணமுடியும். உதாரணமாக, நம் உடல் உறுப்புக்களின் உள்ளேயே சென்று அவை செயல்படும் விதத்தைப் பார்க்க முடியும். இந்தத் தொழில் நுட்பத்தின் பயன்பாடு இனிவரும் ஆண்டுகளில் மிகவும் அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- *மனோரமா* –

நண்பனே!

கணக்காளர் நீங்கள் மேற்கொண்ட
காரியங்கள் கணக்கிலடங்கா......... இருந்தும்
காலன் போட்ட கணக்கினை ஏனோ
கணக்கிட மறந்தீர் ஐயா!

மனைவி பிள்ளைகள் இனம், சனம்
இத்தனை பேருடன் நண்பர்கள் நாம்
கலங்கி நிற்கிறோம் கண்ணீர் சொரிகிறோம்
நீ தந்த நின்ற சேவை உதவிகளை
நாம் நிதம் நினைத்து கலங்குகிறோம்
காலமெல்லாம் உன் நினைவு
காத்திருப்போம் மீண்டும் சந்திக்கும் வரை

அதுவரை
தந்தோம் கண்ணீர் அஞ்சலி
உம் பிரிவால் வாடும்

திருக்கோணமலை
சுகாதார திணைக்கள
உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

ஆசிரியர்: **ஔவையார்**

## கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே

அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண்ணெழுத் திகழேல்
ஏற்ப திகழ்ச்சி
ஐய மிட்டுண்
ஒப்புர வொழுகு
ஓதுவ தொழியேல்
ஔவியம் பேசேல்
அஃகஞ் சுருக்கேல்
கண்டொன்று சொல்லேல்
ஙப்போல் வளை
சனி நீராடு
ஞயம்பட உரை
இடம்பட வீடேல்
இணக்கமறிந் திணங்கு
தந்தை தாய்ப் பேண்
நன்றி மறவேல்
பருவத்தே பயிர்செய்
மண்றுபறித் துண்ணேல்
இயல்பலா தனசெயேல்
அரவ மாட்டேல்
இலவம் பஞ்சிற்றுயில்
வஞ்சகம் பேசேல்
அழகலா தன செயேல்
இளமையிற் கல்
அறனை மறவேல்
அனந்த லாடேல்
கடிவது மற
காப்பது விரதம்
கிழமைப் படவாழ்
கீழ்மை யகற்று
குணமது கைவிடேல்
கூடிப் பிரியேல்
கெடுப்ப தொழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட் டொழி
சக்கர நெறிநில்
சான்றோ ரினத்திரு
சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சுளிக்கச் சொல்லேல்
சூது விரும்பேல்
செய்வன திருந்தச்செய்
சேரிடமறிந்து சேர்
சை எனத் திரியேல்
சொற் சோர்வு படேல்
சோம்பித் திரியேல்
தக்கோ னெனத்திரி
தானமது விரும்பு
திருமாலுக் கடிமைசெய்
தீவினை யகற்று
துன்பத்திற் கிடங்கொடேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கிவினை செய்
தெய்வ மிகழேல்
தேசத்தோ டொத்துவாழ்
தையல் சொற் கேளேல்
தொன்மை மறவேல்
தோற்பன தொடரேல்
நன்மை கடைப்பிடி
நாடொப்பன செய்
நிலையிற் பிரிவேல்
நீர்விளை யாடேல்
நுண்மை நுகரேல்
நூல் பல கல்
நெற்பயிர் விளை
நேர்பட வொழுகு
நைவினை நணுகேல்
நொய்ய உரையேல்
நோய்க்கிடங் கொடேல்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்
பிழைபடச் சொல்லேல்
பீடு பெற நில்
புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
பூமிதிருத்தி உண்
பெரியாரைத் துணைக்கொள்
பையலோ டிணங்கேல்
பொருடனைப் போற்றிவாழ்
போர்த்தொழில் புரியேல்
மனந்தடு மாறேல்
மாற்றானுக் கிடங்கொடேல்
மிகைபடச் சொல்லேல்
மீதூண் விரும்பேல்
முனைமுகத்து நில்லேல்
மூர்க்கரோ டிணங்கேல்
மெல்லினல்லாள் தோள்சேர்
மேன்மக்கள் சொற்கேள்
மைவி ழியார் மனைஅகல்
மொழிவ தறமொழி
மோகத்தை முனி
வல்லமை பேசேல்
வாதுமுற் கூறேல்
வித்தை விரும்பு
வீடு பெறநில்
உத்தம னாயிரு
ஊருடன் கூடிவாழ்
வெட்டெனப் பேசேல்
வேண்டி வினைசெயேல்
வைகறைத் துயிலெழு
ஒன்னாரைத் தேறேல்
ஓரஞ் சொல்லேல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றைவேந்தன்

ஆசிரியர்: ஔவையார்

## கடவுள் வாழ்த்து

கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லற மல்லது நல்லற மன்று
ஈயார் தேட்டை தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினுஞ் செய்வன செய்
ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
ஓதலின் நன்றே வேதியர்க் ஒழுக்கம்
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு
அஃகமும் காசும் சிக்கனத் தேடு
கற்பெனப் படுவது சொல் திறம்பாமை
காவல் தானே பாவையர்க் கழகு
கிட்டா தாயின் வெட்டென மற
கீழோ ராயினுந் தாழ வுரை
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
கூர் அம்பாயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
கொற்றவன் அறிதல் உற்றிடத்துதவி
கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை
சந்ததிக் கழகு வந்தி செய்யாமை
சான்றோர் என்கை ஈன்றோட் கழகு
சிவத்தைப் பேணில் தவத்திற் கழகு
சீரைத் தேடின் ஏரைத் தேடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்
சேமம் புகினும் யாமத் துறங்கு
சையொத்து இருந்தால் ஐய மிட்டுண்
சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை
திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்
துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தெய்வம் சீறிற் கைதவம் மாளும்
தேடாதழிக்கின் பாடாய் முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
தோழனோடும் ஏழமை பேசேல்
நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை
நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை
நீரகம் பொருந்திய ஊரகத்திரு
நுண்ணிய கருமமும் எண்ணித்துணி
நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமில்லை
நேரா நோன்பு சீராகாது
நைபவர் எனினும் நொய்ய வுரையேல்
நொய்யவர் என்பவர் வெய்யவ ராவர்
நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை
பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும்
பாலோடாயினும் காலம் அறிந்துண்
பிறன்மனை புகாமை அறமெனத் தகும்
பீரம் பேணில் பாரந் தாங்கும்
புலையுங் கொலையும் களவுந் தவிர்
பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்
பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்
பேதமை என்பது மாதர்க் கணிகலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையச் சென்றால் வையந் தாங்கும்
பொல்லாங் கென்பவை எல்லாந் தவிர்
போனக மென்பது தானுழந் துண்டல்
மருந்தே யாயினும் விருந்தோடுண்
மாரி அல்லது காரிய மில்லை
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
மீகாம னில்லா மரக்கலம் ஓடாது
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்
மெத்தையின் படுத்தல் நித்திரைக் கழகு
மேழிச் செல்வம் கோழைபடாது
மைவிழியார்தம் மனையகன்றுஒழுகு
மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
மோனமென்பது ஞான வரம்பு
வளவன் ஆயினும் அளவறிந்து அளித்துண்
வானஞ் சுருங்கின் தானஞ் சுருங்கும்
விருந்திலோர்க்கில்லை பொருந்தியவொழுக்கம்
வீரன் கேண்மை கூரம் பாகும்
உரவோரென்கை யிரவா திருத்தல்
ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு
வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறின் ஆந்துணை யில்லை
வைகல் தோறும் தெய்வந் தொழு
ஒத்த விடத்து நித்திரை கொள்
ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணிலிருந்து விண்ணிற்கு

அன்பின் தம்பி ஸ்ரீரங்கா !

இவ்வருடம் நான் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு மாற்றலாகி வந்த போது அகமகிழ்ந்தவன் நீ.

வடக்கு கிழக்கு மாகாண சபையில் கணக்காளர்களுக்கும் நிர்வாகத்தில் உரிய பங்கு கிடைக்க வேண்டும் என்பதற்காகச் சங்கம் அமைப்பதிலே முன்னின்று உழைத்தவன் நீ.

எமது சங்கம் நடத்திய ஆட்சிக் குழுக் கூட்டங்கள் கருத்தரங்குகள் யாவற்றிலும் நீ தவறாது கலந்து சிறப்பித்தவன் நீ.

கடமைகளில் கண்ணும் கருத்துமாய் இருந்து பொதுமக்கள் மேலதிகாரிகள் சக தோழர்கள் ஆகியோரின் பாராட்டைப் பெற்றவன் நீ.

கணக்காளர்கள் என்றால் கைகட்டி வாய்பொத்தி நிற்கும் சேவகர்கள் அல்ல, அவர்களுக்கும் தன்மான உணர்வு உண்டு, என்று உணர்வுக் குரலை ஒத்திசைத்தவன் நீ.

வடக்கு கிழக்கு மாகாணத்திலே கணக்காளர்களின் பங்களிப்பின் மேன்மையை நாடறியச் செய்வோம் எனச் சூளுரைத்தவன் நீ.

கணக்காளர்கள் என்றால் நடமாடும் கணனிகள் என்று இலக்கணம் கூறியவன் நீ.

எல்லாத் திறமைகளையும் பெற்றிருந்த நீ காலனை வெல்லத் தவறியது ஏன்?

காலனுக்குப் பேதங்கள் புரிவதில்லை.

உனக்கு ஏற்பட்ட விபத்து இனிமேல் எந்த மனிதனுக்கும் ஏற்படாதிருக்கட்டும்.

உன் நினைவுகள் என்றும் எம்மிடம் பசுமையாக இருக்கும்.

நாமும் உம்மிடம் வரும் வரை இறைவனின் பாதங்களில் இணைந்தே இருந்திடுக

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

**க.சிவபாலன்**
தலைவர்,
வடக்கு கிழக்கு மாகாண
அரச கணக்காளர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்காளர் ஸ்ரீரங்கன்

கண்மூடி விட்டார்
எனக் கேள்வி மனங்களிலே
இதை யார் நம்புவார்கள்
இதயம் உள்ளவர்கள்
இதை நம்ப மாட்டார்கள்
உதவும் பண்பாளா
உனைக்காலன் வதைத்தானா............

நீ நடந்தால் புல் வளரும்
நீ சிரித்தால் உளம் மகிழும்
நீ யாருக்கு உதவவில்லை
நீ யாரைக் கோபித்தாய் ............

கல்வி அமைச்சினிலே
கணக்காளராய் இருந்தாய்
தொல்லை இல்லாது நல்ல
சேவைக்கு ஆளானாய்
தமிழ் மொழித் தினவிழாவில்
சளைக்காது உழைத்தாயே
'சுவைத் தேன்' மலர்விரிய
துணிந்து எருவிட்டாயே............

உன்னோடு இருந்தவர்கள்
உத்தமன் என்கிறார்கள்
உன் இனிய மனையாளும்
உன் அரிய பிள்ளைகளும்
தன்னந் தனியாக்கி விட்டு
சண்டாளர் மாய்த்தாரோ............

சேவைக்கொரு ரங்கா
சொரிகின்றோம் விழிநீரை
இதயத்தால் அஞ்சலித்து
இருக்கின்றோம் - துயரத்தோடு............

*நலன்புரிச் சங்கம்*
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சம்

அமரர்கள்
இராசையா + நேசமணி

↓

அமரர் சாவித்திரி
பரிமேல் அழகன்
நித்தியானந்தன்

**ஸ்ரீரங்கன்**

ஜனகன்
சத்தியபாமா
அமரர். ஜெயலட்சுமி
ஜெயராணி
ஜெயக்குமாரன்
சிவகுமாரி
விஜயகுமாரி
அமரர். இளமுருகன்

அமரர்கள்
தம்பித்துரை + சிவக்கொழுந்து

↓

துரைராஜா
ருக்மணி
கமலமணி
பூமலர்
யோகேஸ்வரி
பத்மா
புஸ்பராணி

**நாகேஸ்வரி**

சிவராஜா

↓ கஜீபன் ↓ யதூஷன் ↓ கார்த்திகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினம் இல்லாச் சிந்தனையாளன்
சிரித்து உதவும் சீர்குந்தோன்
மனம் உள்ளவரைக்கமுன்னை
மறவேனோ ஸ்ரீரங்கன்

பொய் கூறா நேர்மையாளன்
புவியினிலே கண்ட தென்றல்
மெய்யாக அடித்தே சொல்வேன்
மேன்மைகொண்ட ஸ்ரீரங்கன்

பிறருக்கு உதவி செய்ய
போயொருவர் காட்டு என்றால்
மறுபேச்சுக் கூறு முன்னே
மனதில் வரும் ஸ்ரீரங்கன்

*ஆர். சுகுணதிரன்*
கணக்காளர்

ஒரு நாளா இருநாளா ப            ..ாண்டுகள் எம்மோடிருந்தாய்
நீ மறைந்த செய்தியை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை
ஆனாலும் என்ன செய்வோம் இயற்கையை யார் வெல்வார்?
கணக்குப் பதியுனராக எமது திணைக்களத்திற்கு வந்த நீ
கணக்காளராக உன் திறமையால் உயர்ந்தவன்
எமக்கு நீ செய்த உதவிகள் ஒன்றா இரண்டா?
இந்த மாவட்ட கல்வி சமூகத்திற்கு நீ செய்த சேவையை
வார்த்தைகளில் அடக்க முடியுமா?
வான்வழியில் வந்த செய்தி கனவாக மாறாதா?
மாண்டாய் நீ என்ற செய்தி பொய்யாகப் போகாதோ
என்று ஏங்குகின்றோம்
ஆனாலும் என்ன செய்வோம்
இயற்கையை யார் வெல்வார்?
உன் ஆதம சாந்திக்காய் எல்லாம் வல்லோனை வேண்டுகின்றோம்

**கல்வித்திணைக்களம்**
மட்டக்களப்பு மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எமது குடும்ப குல விளக்கின் விபத்துச் செய்தியறிந்து ஸ்தலத்திற்கு விரைந்து உதவியவர்களுக்கும், வைத்தியசாலையில் இரத்ததானம் செய்த அன்பர்கள், மற்றும் சகல வழிகளிலும் உதவிய வைத்தியர்கள், தாதிகள், வைத்தியசாலை ஊழியர்களுக்கும் நண்பர்களுக்கும்.

மரணச்சடங்கில் சகல வகையிலும் உதவி புரிந்த நண்பர்கள் அலுவலர்கள் உறவினர்கள் அனைவருக்கும்; மரணச்சடங்கில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தும் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டும் மற்றும் பல்வேறு வகையிலும் உதவிகளைப் புரிந்த சகலருக்கும் ; இன்றைய இந் நிகழ்வில் கலந்து கொண்ட சகலருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்

அன்புக்கினியானாகி
ஆருயிர்த் தோழனாகி
பண்புடையனாகி
நற்பணியாளனாகி
தொண்டு பல செய்து
தோழமையுடன் பழகி
செய்யும் தொழிலே தெய்வமென்று
கடமையில் கண்ணாக
காரியாலயம் சென்று வரும் போது

ஆறெட்டு வயதில்
ஐப்பசித் திங்கள் இருபதாம் நாள்
அரக்கர்களின் அராஜகத்தால்
அரை நொடிக்குள் அகாலத்தை தழுவி
மீளாத சோகத்தில் ஆழ்த்தி விட்டாயே

அன்பனே உன் ஆத்மா
சாந்தி அடைய
உன் அன்புக்கினியாள்
அருமைச் செல்வங்களுடன்
ஆண்டவனை வேண்டுகின்றேன்

**அன்பன் குமரகுரு.**

## எல்லாப் புகழும் இறைவனுக்கே.............

பழகுவதில் இனிமையானவரான மறைந்த ரங்கன் மட்டக்களப்பில் சேவையாற்றிய காலத்தில் அனைத்து ஆசிரியர்களுக்குமே பிரதியுபகாரமின்றி உதவி செய்தவர். உதவி பெற்ற எவரேனும் நன்றி சொன்னால் எனக்கல்ல, இறைவனுக்கே நன்றி சொல்லுங்கள் என்பார்.

எஸ். ஸ்ரனிஸ்லாஸ்,
*இளைப்பாறிய மட்டக்களப்பு கல்வித் திணைக்கள*
*நிர்வாக உத்தியோகத்தரும், சட்டத்தரணியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*கடைசிப்பக்கம்................*

உங்களது
அத்தியாயத்தின்
கடைசிப்பக்கம்
எழுதி முடிக்கப்பட்டுவிட்டது
எங்களது
அத்தியாயத்தின்
கடைசிப்பக்கம்
என்றோ ஒரு நாள்
நிச்சயம்
எழுதப்படும்
அதுவரை.............
உங்கள் நினைவுகளுடன்............

*Design By :*
**EBC** *Computer Training Center*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org